www.tamilarangam.net

# இலங்கையின் மலையகத் தமிழர்



கலாநிதி க. அருணாசலம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையின் மலையகத் தமிழர்

கலாநிதி
க. அருணாசலம்

தமிழ் மன்றம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ILANKAIYIN MALAIYAKAT THAMILAR

(History of the Upcountry Tamils of Sri lanka)

by Dr. K. ARUNACHALAM,
Senior Lecturer, Grade I
University of Peradeniya,
Peradeniya,
Sri Lanka.

© Copyright reserved

Wrpper Design : Jeeva

First Published in June, 1994

Seventy Second publication of :

THAMIL MANRAM,
No:10, Fourth Lane,
Koswatta Road,
Rajagiriya, Sri Lanka.

---

அச்சும் அமைப்பும் : இளவழகன் பதிப்பகம், 4, இரண்டாவது தெரு,
ஆண்டவர் நகர், கோடம்பாக்கம், சென்னை – 600 024.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு புதிய கண்ணோட்டம்

அமெரிக்காவின் அபிவிருத்தியில் ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தவர்களின் பங்களிப்பு நிறையவுண்டு. பதினெட்டாம் நூற்றாண்டின் முத்திரையாகக் கருதத்தக்க 'அடிமை வர்த்தகம்' அமெரிக்காவின் முன்னேற்றத்திற்குத் தேவையான கூலிகளை, பெரும்பாலும் ஆபிரிக்காவிலிருந்து பலாத்காரமாகக் கடத்தப்பட்டுச் செல்வதில் அமைந்திருந்தது. அன்றைய நாகரிகத்திற்கு 'அடிமை வர்த்தகம்' அருவருப்பாக இருக்கவில்லை. அக்காலத்தில் ஏனைய நாடுகளின் அபிவிருத்திக்கு உழைப்பதற்கும் சீனா, இந்தியா முதலிய நாடுகளிலிருந்து பலர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இலங்கையிலிருந்தும் கூட, ஒரு சிலர் ஆஸ்திரேலியாவுக்குக் கூலிகளாகச் சென்ற வரலாறொன்றுண்டு.

இலங்கையின் மத்திய பகுதியிலுள்ள மலைகளில் அமைந்திருந்த காடுகளைக் களைந்தெறிந்து, முதலில் கோப்பியும், பின்னர் தேயிலைத் தோட்டங்கள் தோன்றுவதிலும் தென்னிந்தியத் தமிழர்களின் பங்களிப்பு அபரிமிதமானது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மூன்றாம், நாலாம் தசாப்தங்களில் ஒரு சிலரே தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வந்தனர். காலஞ் செல்லச்செல்ல இவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூட, பெருந்தொகையானோர் இலங்கையில் குடியேறினர். இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர், தென்னிந்தியர் வருகை நின்றுவிட்டது. அதற்கு மாறாக, இங்கிருந்து ஆயிரக்கணக்கானோர் திருப்பியனுப்பப்படும் சூழ்நிலை உருவானது. இவர்களின் வருகைக்கான காரணிகளை அலசுவதுதான் இந்நூல். இவர்களின் வரலாறு பற்றி, பல நூல்கள் (அதிகமானவை, ஆங்கில மொழியில்) வெளிவந்துள்ளன. எனினும், கலாநிதி க. அருணாசலம் அந்த வரலாற்றை ஒரு புதிய கோணத்திலிருந்து பார்க்கிறார். இவர்கள் தமது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி, ஏனைய நாடுகளுக்குச் செல்வதற்கான அடிப்படைக் காரணங்களை இந்நூலில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இலங்கையில் மட்டுந்தானா அவர்களுக்கு இத்தகைய பரிதாபகரமான நிலைமை?" என்று கேள்வியெழுப்பிவிட்டு, கேள்விக்கான பதிலையும் கூறுகிறார்: "தமிழகத்திலும் அவர்களது தாயகத்திலும், ஏறத்தாழ இதே நிலைமையே காணப்பட்டது. அதுவும் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் மட்டுமல்லாது, அவற்றுக்கு முன்னாகப் பல நூற்றாண்டுகளாக இத்தகைய பரிதாபகரமான நிலைமை, முடிவற்ற சோக நாடகமாகவும், தொடர்கதையாகவும் விளங்கி வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இந்தியாவினதும் அதன் ஒரு கூறான தமிழகத்தினதும் சமூக, பொருளாதார வரலாறுகளைக் கூர்ந்து கவனிக்கும் எவரும் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்வர்."

இப்படியாக, மலையகத் தமிழர் நிலைபற்றி பல்வேறு ஆதாரங்கள் காட்டி, அவர்களின் பரிதாபகரமான நிலைமைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அத்திவாரம் அமைந்து விட்டதை கலாநிதி அருணாசலம் விளக்கியுள்ளார். ஏனைய ஆதாரங்களோடு, இலக்கியங்களில் பின்னிக் காணப்படும் தகவல்களையும் கடைந்தெடுத்து, அவர் புதிய பாணியில் வரலாறு கூறியிருக்கிறார். இப்படியான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரலாற்று நூலை நாம் பிரசுரிப்பதற்கு வாய்ப்புத் தந்த அவருக்கு எமது நன்றி.

உலகில் வஞ்சிக்கப்பட்ட சமூகமொன்றின் சோகவரலாறு முறையான பின்னணியில் நோக்கப்படுகின்ற அரிய நூலாக இது அமைந்துள்ளது. தமிழுலகு இந்நூலுக்கு நல்ல வரவேற்பு அளிக்குமென உறுதியாகக் கூறலாம்.

எஸ்.எம். ஹனிபா,
நிறுவனர்,
தமிழ் மன்றம்.

10, நாலாவது லேன்,
கொஸ்வத்த ரோட்
ராஜகிரிய.

www.tamilarangam.net

# முகவுரை

மலையகத் தொழிலாளரின்பால் எனது கவனத்தை முதலில் திசை திருப்பியது புதுமைப்பித்தனின் "துன்பக்கேணி" என்னும் சிறுகதையேயாகும். அக் கதையினைக் கருத்தூன்றிப் படித்தபோது, என்னையுமறியாமலே என் கண்கள் பனித்துவிட்டன. பல வருடகாலம், மலையகத் தொழிலாளர் பற்றிய சிந்தனை அடிமனதில் கருக்கொண்டிருந்தது. மலையகத் தொழிலாளர் பற்றிய ஆக்கங்கள் பலவற்றையும், அவ்வப்போது படித்து வந்தேன். அவ்வப்போது, மலையகத் தமிழ் இலக்கியம் தொடர்பாகச் சில கட்டுரைகளையும் எழுதினேன். எனினும், மலையகத் தமிழ் மக்களின் வரலாறுபற்றி முழுமையாக நோக்கி, ஒரு நூல் எழுதி வெளியிட அவகாசமில்லாது போய்விட்டது.

மலையகத் தொழிலாளர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள், வாழ்க்கைப் போராட்டங்கள், உரிமைப் போராட்டங்கள், தற்பொழுது ஏற்பட்டுவரும் மாற்றங்கள், இன்றைய நிலைமைகள் முதலியன பற்றியெல்லாம் விரிவாக நோக்குவதற்கு முன்பு, கடந்த நூற்றாண்டிலே அவர்கள் தமது தாயகத்தை விட்டுப் புறப்படுவதற்கான காரணங்கள் தமிழகத்திலேயே அன்றைய அவர்களது சமூக, பொருளாதார நிலைமைகள் முதலியனபற்றிச் சற்றுச் சுருக்கமாக இங்கு நோக்குதல் இன்றியமையாதது. இவை சரியான முறையில் இனங்காணப்பட்டு களைந்தெறியப் பட்டாலொழிய தோட்டத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு கிட்டுவது அரிதாகும்.

தோட்டத் தொழிலாளரின் நல்வாழ்வுக்கு வழிகோலும் திட்டங்கள் அமைப்பதற்கு ஒரு அறிமுக முயற்சியாக இந்நூல் பயன்படுமென நினைக்கிறேன். இதனைப் பிரசுரிப்பதற்கு முன்வந்த, தமிழ் மன்ற நிறுவனர் சட்டத்தரணி எஸ்.எம்.ஹனிபா அவர்களுக்கு எனது நன்றி. நூல் அச்சிடுவதில் உதவிபுரிந்த திரு.வே. கருணாநிதி அவர்களுக்கும் எனது நன்றி.

க. அருணாசலம்

தமிழ்த் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையக மக்களின் வரலாறு போராட்டம் நிறைந்ததாகும். போராட்டமே வரலாறாகக் கொண்டவர்கள் இந்த மக்கள். இத்தகைய போராட்டங்களில், பல வழிகளில் உயிர்த்தியாகம் செய்தவர்கள் பலர். அவர்களுக்குத் தலைவணங்கி அஞ்சலி செலுத்துவதும் நினைவு கூர்வதும் இன்றைய சந்ததியினரின் கடமையாகும்.

மாத்தளை கார்த்திகேசு

மலையக சமூகம் நாட்டின் ஏனைய சமூகத்தினரைப் பொறுத்தவரை, ஒரு தாழ்த்தப்பட்ட கேளிக்கையான சமூகமாகக் கணிக்கப்படுகிறது. உதாரணமாக; மலையக சமூகம் வெறும் சோற்றுப் பிண்டங்கள், கல்வி அறிவற்ற சமூகம், இன்னும் கொஞ்சம் பச்சையாகச் சொல்வோமேயானால் "தோட்ட காட்டான்". இப்படிப் பல பட்டப் பெயர்களை எமது மலையக சமூகம் ஏனைய சமுதாயத்தின் கணிப்பின் மூலம் சூடிக்கொள்கிறது. இதற்கு முக்கிய காரணம் இந்த மக்கள் மொழி ரீதியாக, இன ரீதியாக கலை, கலாச்சார ரீதியாக சரித்திரப் பாரம்பரியங்களைக் கொண்டதோர் அறிவுள்ள, ஆற்றலுள்ள சமூகம் என்ற யதார்த்த ரீதியான உண்மையை இவர்கள் உணர்ந்து கொள்ளாததே.

– மாத்தளை ரோகிணி

(த. அய்யாத்துரை)

("உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள் " என்னும் நூலில்.)

www.tamilarangam.net



# மலையகத் தோட்டத் தொழிலாளர் – ஓர் அறிமுகம்

தமிழக வரலாற்றிலும், தமிழ் இன வரலாற்றிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டினைக் கறைபடிந்த ஒரு காலகட்டமாகக் குறிப்பிடுதல் இன்று பலர் மத்தியிலும் வழக்கமாகிவிட்டது. தமிழகத்தின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றினைச் சற்று ஊன்றி நோக்கினால் சில உண்மைகள் புலப்படும். 'கறை' படிந்த காலகட்டமும் கொடுமைகள், வேதனைகள், அவலங்கள் முதலியன நிறைந்த அதன் இயல்புகளும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலே விஷ்வரூபம் பெற்றுக் காணப்படினும் அவற்றின் தோற்றப்பாட்டினையும் வளர்ச்சியையும் பல நூற்றாண்டுகள் முன்னதாகவே தமிழக வரலாற்றிலும் தமிழகத்தை உள்ளடக்கிய இந்திய வரலாற்றிலும் காணமுடிகின்றது. அதே போன்று, 'கறை' யின் எச்ச சொச்சங்களை இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டமான இன்றுங்கூடத் தமிழகத்திலும் இலங்கையிலும் கண்கூடாகக் காணலாம்.

### பல நூற்றாண்டுகளுக்கு முன்பு....

"காகம் இல்லாத ஊரும் கிடையாது; தமிழன் இல்லாத நாடும் கிடையாது" என்பது பழமொழியாகவோ, அன்றிப் புதுமொழியாகவோ வழங்கப்படுகின்றது. சிலர் இதனைப் பெருமையுடனும் கூறிக்கொள்வர். எவரும் இதில் பெருமைப்படுவதற்கு எதுவுமேயில்லை. மாறாக, வேதனையும் சோகமுமே மேலோங்கிக் காணப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று அங்கு அரசியல் பொருளாதாரத் துறைகளில் ஆதிக்கம் செலுத்திய பிரித்தானியரைப் போன்று தமிழர்களும் செய்திருந்தாலாவது, ஏகாதிபத்தியப் பெருமை பேசிக்கொள்பவர்கள் பெருமிதப்படலாம். ஆயின், தமிழ்த் தொழிலாளர்களோ பலநூற்றாண்டுகளாகத் தமது தாயகத்திலேயே தமது இனத்தவராலேயே சாதி, குலம், சமயம், சாத்திரம், தெய்வம் முதலியவற்றின் பெயராலே தயை தாட்சண்யமின்றிச் சுரண்டப்பட்டும், வஞ்சிக்கப்பட்டும்

www.tamilarangam.net



கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டும் வாழ்வு பறிக்கப்பட்ட நிலையில், வேறு வழியின்றித் தமது வயிற்றுத் தீயைத் தணித்தற் பொருட்டு, இதயக் குமுறலுடனும் கலங்கிய கண்களுடனும் தாயகத்தை விட்டு வெளியேறினர்; வெளியேற்றப்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், உலகின் பல்வேறு பாகங்களுக்கும் பூரண அடிமைகளாகவும் அரை அடிமைகளாகவும், கூலிகளாகவும் தமிழ்த் தொழிலாளர்கள் தமிழகத்திலிருந்து பண்டங்களைப் போன்றோ, மந்தைகளைப் போன்றோ கப்பல்களில் ஏற்றப்பட்டும், கொண்டு செல்லப்பட்டும் குடியமர்த்தப்பட்டனர். அக்காலப்பகுதியில், உலக அரங்கில் ஆதிக்கப் போட்டியிலே தீவிரமாக ஈடுபட்ட பிரித்தானியரதும் பிரான்சியரதும் ஆதிக்கத்திலிருந்த நாடுகளிலும் தீவுகளிலுமே, தமிழ்த் தொழிலாளர்கள் அதிக அளவிற் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு குடியமர்த்தப்பட்ட நாடுகளும், தீவுகளும் நாற்பதுக்கும் மேற்பட்டவை எனக் கூறுவர்.[1] எனினும், இதுவரை யாரும் சரியான முறையில் கணக்கிட்டுள்ளதாகத் தெரியவில்லை. இவ்விடங்களிலே குடியமர்த்தப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின் அன்றைய அவலங்கள் இன்றைய நிலை முதலியன பற்றி வரலாற்று ரீதியாகவும் விரிவாகவும் இதுவரை ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. எனினும், இவ்வகையிலே தமிழ்த் தூதர் தனிநாயக அடிகளார், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பொதுச் செயலாளர் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் முதலியோர், இனப்பற்றுதலினால் உந்தப்பெற்று மேற்கொண்ட பணிகள் பாராட்டத்தக்கவை.

தமிழக வரலாற்றின் முன்னைய காலகட்டங்களிற் காணப்படாத அளவிற்கு பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலட்சோபலட்சம் தமிழ்த் தொழிலாளர்கள் தமிழகத்திற்கு மிக அண்மையிலுள்ள இலங்கையில் மட்டுமன்றி, நூற்றுக் கணக்கான பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள நாடுகளுக்கும் தீவுகளுக்கும் கொண்டு சென்று குடியமர்த்தப்பட்டனர். அவற்றுள் முக்கியமான இடங்கள் சில, வருமாறு:- நேவிஸ், அன்ரில்ஸ், தாஹித்த, நியூ கலிடோனியா, கிரனிடா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செண்ட்குறோக்ஸ், பிஜி, டேமாறா, மொறீசியஸ், ரிறினிடாட், றீயூனியன், தென் ஆப்பிரிக்கா, வியட்னாம், அந்தமான், சுமாத்திரா, சிசெல்ஸ், ஜமெய்க்கா, சுரினாம், பிரிட்டிஷ் கயானா, பிரெஞ்சுக் கயானா, குவாட்லோப், மாட்னிக், செண்ட் வின்சன்ற், செண்ட் கீறஸ், சென்ற் லூசியா, பர்மா, சிங்கப்பூர், மலேசியா. அவர்கள் அங்கு அனுபவித்த கொடுமைகள் அளப்பில. அவர்களது வரலாறு சோகம் மிகுந்து, துயரங் கவிந்து, இருள்படிந்து குருதி நிறைந்து வேதனைகள் மலிந்து காணப்படுகிறது.

## கொடூரமான சுரண்டல்

அரசியல். பொருளாதார, சமூக ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டு முதலில் பிரித்தானிய, பிரான்சிய ஆட்சியாளர்களாலும், பின்பு சுதேச ஆட்சியாளர்களாலும், அந்தந்த நாடுகளையும் தீவுகளையும் சேர்ந்த சுதேச இனத்தவர்களாலும், தொழிலாளர்களல்லாத ஏனைய தமிழர்களாலும், ஏனைய இந்தியர்களாலும் – வணிகர்கள், அதிகாரிகள், தோட்ட உத்தியோகத்தர்கள், பிற அலுவலர்கள் – கொடூரமாகச் சுரண்டப்பட்டனர்; சுரண்டப்படுகின்றனர். மேற் கூறப்பட்ட நாடுகள், தீவுகள் பலவற்றிலே வாழும் தமிழ்த் தொழிலாளரிற் பெரும் பகுதியினர், இன்று தமிழ் பேசவோ எழுதவோ வாசிக்கவோ தெரியாத நிலையிலேயே காணப்படுகின்றனர் என்பதும், அதிக அளவிற் சுதேச இனத்தவர்களுடன் கலப்புற்று விட்டனர் என்பதும், அவ்வாறு கலப்புற்ற நிலையில் அவர்கள் பெருமளவு உரிமைகளுடனும் சலுகைகளுடனும் ஓரளவு வளத்துடனும் வாழ்ந்து வருகின்றனர் என்பதும், தொழிலாளர்களில் கணிசமானவர்களின் இளந்தலைமுறையினர் கல்வி கற்றுப் பிற வேலைவாய்ப்புகளைப் பெற்று, முன்னேறத் தொடங்கியுள்ளனர் என்பதும் இங்கு நோக்கப்பட வேண்டியனவாகும்.[2]

இன்று இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய சில நாடுகளிலேயே தமிழ்த் தொழிலாளர்கள் தொடர்ந்தும் தொழிலாளர்களாகவும், அதேசமயம் தமிழர்களாகவும் வாழ்ந்து வருகின்றமையும் அத்தகைய சில நாடுகளுள் இலங்கையே முதன்மையானதாகவும் இலட்சோபலட்சம் தமிழ்த்

www.tamilarangam.net



தொழிலாளர்களைக் கொண்டுள்ளதாகவும் விளங்குகின்றமை கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். இலங்கை தமிழகத்திற்கு மிக அண்மையில் இருப்பதாலும், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழகம் பல்வேறு துறைகளிலும் இலங்கையுடன் உறவு பூண்டிருப்பதாலும் வரலாற்றின் ஆரம்பகாலந்தொட்டே, இலங்கையிலே தமிழர்கள் கணிசமான தொகையினராக வாழ்ந்து வருவதாலும், இந்நிலைமை சாத்தியமாயிற்று எனலாம். எனினும், இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலே காலம் காலமாக வாழ்ந்துவரும் தமிழர்களின் வாழ்க்கை நிலைமைகளிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும் வேறுபட்ட வாழ்க்கை நிலைமைகளையும் பிரச்சினைகளையும் கொண்டவர்களாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டிற் குடியேற்றப்பட்ட தமிழ்த் தொழிலாளர்கள் விளங்குகின்றனர்.

இவ்வாறு, தமிழகத்திலிருந்து கடந்த நூற்றாண்டிலே இலங்கையின் மலையகப் பகுதிகளிற் குடியேறிய - அல்லது குடியேற்றப்பட்ட, தமிழ்த் தொழிலாளர்கள் மிக அண்மைக் காலம் வரை, சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் இலங்கையிற் காலம் காலமாக வாழ்ந்துவந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், அவர்களது அலட்சியத்திற்காளானவர்களாக விளங்கினர்; கூலிகள் என்றும் கள்ளத் தோணிகள் என்றும் வடக்கத்தையார், தோட்டக்காட்டார், இந்தியாக்காரர் என்றும் அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டனர்; இம்சிக்கப்பட்டனர். ஆயின், இன்று நிலைமைகள் மிக வேகமாக மாறிக்கொண்டு வருகின்றன. தமிழ்த் தொழிலாளர்களின் துயரங்களும் இன்னல்களும் சுரண்டற் கொடுமைகளும் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, தோட்டத் தொழிலாளர் மத்தியில் நாம் இதுகாலவரை கண்டிராத அளவிற்கு, விழிப்பும் எழுச்சியும் உரிமை வேட்கையும் முன்னேற்றமும் அதிகரித்து வருதல் கவனிக்கத்தக்கதாகும்.

இந்நிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கேற்பு தமிழ்த் தொழிலாளர்களையும் அவர்களைச் சார்ந்து வாழும் சிறுதொகையினரையும் குறிப்பிடுவதற்கு மலையகத் தமிழர், 'மலையகத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோட்டத் தொழிலாளர்' என்னும் சொல்லாட்சிகளையும் பயன்படுத்தும் வழக்கு, இன்று பரவலாக அதிகரித்து வருவதைக் காணலாம்.[3] இன்றைய நிலையில், மலையகத் தமிழர் என்னும் பதம் மலையகத்தில் நிரந்தரமாக வாழும் தொழிலாளர்களல்லாத பிற தமிழ் மக்களையும், வர்த்தகர்கள், பிற அலுவலர்கள் முதலியோரையும் உள்ளடக்கி நிற்கும். 'மலையகத் தோட்டத் தொழிலாளர்' என்னும் போது, தமிழ்த் தொழிலாளர்களை மட்டுமன்றித் தோட்டங்களிலே தொழிலாளர்களாகப் பணிபுரியும் சிறு தொகையினரான சிங்கள, முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கி நிற்கும். எனினும், இந்நூலில் 'மலையகத் தோட்டத் தொழிலாளர்' என்பது தவிர்க்க முடியாத காரணங்களினால், தமிழ்பேசும் தொழிலாளர்களையே குறித்து நிற்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் தமிழகத்திலிருந்து சென்று குடியேறிய – குடியேற்றப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு, இதுகாலவரை எங்குமே செம்மையாகவும் விரிவாகவும் எழுதப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. இலங்கை தவிர்ந்த பிற நாடுகளிற் குடியேறிய தமிழ்த் தொழிலாளர்களின் இன்றைய நிலைபற்றி மேலெழுந்தவாரியான சில தகவல்களை மட்டுமே, ஒருசிலர் வெளிப்படுத்தியுள்ளனர்.[4] இலங்கையின் மலையகத் தமிழ்த் தொழிலாளர் பற்றிய வரலாறு, இதுவரை செம்மையாக எழுதப்படவில்லையாயினும் சிலர் இத்துறையிற் குறிப்பிடத்தக்க பயனுள்ள முயற்சிகளைச் செய்துள்ளனர்; செய்து வருகின்றனர்.[5] மலையகப் பகுதியில் குடியேறிய தொழிலாளர்கள், கடந்த ஒன்றரை நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாகத் தமக்கே பிரத்தியேகமாகவுரிய பல பிரச்சினைகளையும் இலங்கையில் வாழும் பல்வேறு சமூகத்தினருக்கும் பொதுவாகவுரிய பிரச்சினைகளையும் கொண்டவர்களாக, இன்றுவரை வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மலையகத் தொழிலாளர் பற்றிய நோக்கு இருவகையில் அமைந்து வருவதை அவதானிக்கலாம். அவையாவன :– (அ) இன ரீதியான நோக்கு (ஆ) வர்க்க ரீதியான நோக்கு. அவைதவிர, மூன்றாவது நோக்கும் காணப்படுகிறது. அதாவது இனம் என்ற எல்லைக்குள் அமைந்த, வர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரீதியான நோக்கே அதுவாகும்.[6] இவற்றுள் எது சரியானது? எது தவறானது? என்ற விவாதம் ஒருபுறமிருக்க, ஒவ்வொரு சாராரும் தத்தமது நிலைப்பாட்டில் நின்று நோக்குவதை அவதானிக்க முடிகின்றது. இவைபற்றி, இந்நூலிற் பின்னர் விரிவாக ஆராயப்படும். மலையகத் தொழிலாளர் வரலாற்றினைச் செம்மையாக அறிந்து கொள்வதற்கு உதவும் வகையில், போதிய அளவிற்கு முதன்மைச் சான்றாதாரங்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படுகின்றன. முதன்மைச் சான்றாதாரங்கள் தரும் தகவல்களை மேலும் உறுதிப்படுத்தும் வகையிலும், விரிவாக விளக்கும் வகையிலும் போதிய அளவு துணைச் சான்றாதாரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் விதந்து கூறத்தக்கவை மலையகத் தொழிலாளர் மத்தியிலே பெருவழக்குப் பெற்று விளங்கும் 'மலையக நாட்டுப் பாடல்களும்' மலையகத் தொழிலாளர் பற்றி இதுவரை எழுந்துள்ள கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், புதுக் கவிதைகள், உரைநடைச் சித்திரங்கள் முதலியனவுமாகும்.

### "தொழிலாளர்கள்"

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இலட்சோபலட்சம் தமிழ் மக்கள் 'தொழிலாளர்கள்' என்னும் பெயரில் அடிமைக் கூலிகளாகத் தமது தாயகத்தை – தமிழகத்தை விட்டு நீங்கியமைக்கான காரணங்கள் யாவை? பலர் இதற்கான காரணங்களைக் கூறுகையில், பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழகத்திலே ஏற்பட்ட கொடிய பஞ்சங்களும் பிரான்சியர், பிரித்தானியர் ஆகியோரது ஆட்சியும் அவர்கள் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கையுமே காரணங்கள் என மிக நாசூக்காகவும் மேம்போக்காவும் கூறித் தப்பிவிடுகின்றனர். உண்மையில், இவை துணைக் காரணிகளாகவோ, உடனடிக் காரணிகளாகவோ அமைந்துள்ளதை அவதானிக்கலாம்.[7]

பிரித்தானியரின் மோகவலையிற் சிக்கித் தமது தாயகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் கொடுமையைப் போக்கவும், அதற்கும் மேலாகப் பண்ணையார்களின் கொடுமைகளிலிருந்து தப்பி விமோசனம் தேடவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புறப்பட்ட இலட்சோபலட்சம் தமிழ்த் தொழிலாளர்கள், இலங்கையிலோ பிற இடங்களிலோ தொடர்ந்தும் பட்டினியினாலும் வறுமையினாலும் கொடூரமாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். தொழிலாளர்கள் குடியேறிய இடங்களில் எல்லாம், சிறு தொகையினராகக் 'குருவிச்சை' வாழ்க்கை நடத்தும் தொழிலாளர்களல்லாத தமிழர்களும் பிற இனத்தவர்களும் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ குடியேறினர். அவர்கள் சிறிய வர்த்தகர்களாகவோ பெரும் வர்த்தகர்களாகவோ, தோட்ட உடைமையாளராகவோ, அதிகாரிகளாகவோ, அரசாங்க ஊழியர்களாகவோ பிற அலுவலர்களாகவோ விளங்கினர்; விளங்குகின்றனர். அவர்கள் வளமாக வாழ்வதையும், வறுமையும் பட்டினியும் பஞ்சமும் அவர்களை நெருங்க அஞ்சுவதையும், அவதானிக்க முடிகின்றது.

தமிழகத்தில் இன்றுங்கூடக் கோடிக்கணக்கான உடலுழைப்பாளிகள், நாள் முழுதும் மாடாக உழைத்தும் வறுமையினாலும் பட்டினியினாலும் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றனர். அதே சமயம் சமூகத்தின் மேல்மட்டத்திலுள்ளோர் செல்வச் செழிப்பிலும் ஆடம்பர வாழ்விலும் திளைப்பதை அவதானிக்கலாம். இந்நிலைமை, தமிழகத்தில் மட்டுமன்றித் தமிழகத்தை உள்ளடக்கிய இந்தியா முழுமையிலும், இலங்கையிலும் கூடக் காணத்தக்க ஒன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டமான இன்றுங்கூட, இலங்கையின் ஏனைய சமூகத்தினருடனோ சமூகப் பிரிவினருடனோ ஒப்பிடுகையில் மலையகத் தோட்டத் தொழிலாளரின் சமூக, பொருளாதார நிலைமைகள், கல்வி வசதி, வாழ்க்கைத் தரம் முதலியன மிகவும் இரங்கத்தக்க நிலையிலேயே காணப்படுகின்றன. மிதமிஞ்சிய உழைப்பும் மிகக் குறைந்த வருவாயும், அறியாமையும் வறுமையும் சொல்லொணாத் துயரங்களும் அவலங்களும் அவர்களது சொத்துக்களாக விளங்குகின்றன. ஆரம்பத்திற் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தாலும், பின்னர் இலங்கைச் சுதேசிகளான சிங்கள, முஸ்லிம், தமிழ்ச் சமூகத்தினராலும் பல்வேறு துறைகளிலும் பல்வேறு வழிகளிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகிறார்கள்; ஒதுக்கப்படுகிறார்கள்; சுரண்டப்படுகிறார்கள்.

இலங்கையில் மட்டுந்தானா அவர்களுக்கு இத்தகைய பரிதாபகரமான நிலைமை? தமிழகத்திலும் – அவர்களது தாயகத்திலும், ஏறத்தாழ இதே நிலைமையே காணப்பட்டது. அதுவும் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் மட்டுமல்லாது அவற்றுக்கும் முன்னதாகப் பல நூற்றாண்டுகளாக இத்தகைய பரிதாபகரமான நிலைமை முடிவற்ற சோக நாடகமாகவும் தொடர்கதையாகவும் விளங்கி வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இந்தியாவினதும் அதன் ஒரு கூறான தமிழகத்தினதும் சமூக, பொருளாதார வரலாறுகளைக் கூர்ந்து கவனிக்கும் எவரும் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்வர்.

மலையகத் தொழிலாளர்களினதும் அவர்களது முன்னோர்களதும் இரங்கத்தக்க நிலைமைகளுக்கும் சொல்லொணாத் துயரங்களுக்குமான ஆதிமூலம் பல நூற்றாண்டுகள் முன்னதாகவே தமிழகத்தில் உரம்பெறத் தொடங்கிற்று. பல நூற்றாண்டுகளாக உரம்பெற்றிருந்த அத்தகைய சமூக, பொருளாதார அமைப்புகள் தமிழகத்தில் இன்றுங்கூடப் பெருமாற்றங்கள் எவற்றுக்கும் உட்படவில்லை. நிலவுடைமை ஆதிக்கமும், பண்ணை அடிமை அமைப்புமுறையும் தொடர்கதையாகவே விளங்குகின்றது. அதன் மேற்கட்டுமானங்கள் சில, சிற்சில மாற்றங்களுக்குட்பட்டிருக்கலாம் அவ்வளவே! இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு: இலங்கை – இந்திய அரசுகளினால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளின் நிமித்தம், மலையகத் தோட்டத் தொழிலாளர்களிற் கணிசமான தொகையினர் தாயகம் திரும்ப வேண்டியேற்பட்டது. அவ்வாறு தாயகம் திரும்பியோரின் இன்றைய நிலைமை எத்தகையது? "நரியூருக்குப் பயந்து, புலியூருக்குப் போன" கதைபோலவே, தாயகம் திரும்பியோர் தமது தாயகத்தில் இன்று தவித்துக் கொண்டிருக்கின்றனர்.[8]

மிக நீண்ட காலமாக இருளில் மூழ்கடிக்கப்பட்டிருந்த இந்தியாவினதும் அதன் ஒரு கூறான தமிழகத்தினதும் சமூக பொருளாதார வரலாறுகள் கடந்த சில தசாப்தங்களாக வெளிச்சத்திற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்துகொண்டிருக்கின்றன. அதன் பிரதிபலிப்பாக இதுகாலவரை திட்டமிட்டு மறைக்கப்பட்டிருந்த பல உண்மைகள் அம்பலமாகத் தொடங்கியுள்ளன.[9] இக் கட்டத்திலே, புதுமைப்பித்தன் கதைகளே ஞாபகத்திற்கு வருகின்றன.

புதுமைப்பித்தன் கதைகளைப் பற்றி ஆய்வாளர் ஒருவர் குறிப்பிடுகையில், ஓரிடத்தில்; "...........அவரது கதைகள், அதுகாலவரை வெளிச்சத்திலே பகட்டித் திரிந்தவற்றை இருளிற்குள் ஓட்டின. இருளிலே மறைக்கப்பட்டிருந்தவற்றை வெளிச்சத்திற்கு இழுத்துவந்தன........."[10] எனக் குறிப்பிட்டுள்ளமை கூர்ந்து கவனிக்கத்தக்கது.

## 'துன்பக் கேணி'

புதுமைப்பித்தன் தமது 'துன்பக் கேணி' என்னும் கதையில், இன்றைய மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மூதாதையர்களைப் பற்றியும் அவர்கள் தமிழகத்திலே – தமது தாயகத்திலே சமூக பொருளாதார ரீதியாக எத்தகைய கொடூரமான முறையில் அடக்கி ஒடுக்கி ஒதுக்கப்பட்டிருந்தனர் என்பதையும் மிக நாசூக்காகவும், அதேசமயம் மிகத் துல்லியமாகவும் காட்டியுள்ளார். இதுபற்றி, இவ்வாசிரியராற் பிறிதோரிடத்தில் விரிவாக நோக்கப்பட்டுள்ளது. அக்கட்டுரையின் ஒரு பகுதியை இங்கு எடுத்தாளுதல் பொருந்தும். "........ துன்பக்கேணி என்னும் கதையிலே தமிழர் சமூகத்தின் தாழ்ந்த படித்தரங்களிலுள்ள ஒரு பகுதி மக்களின் அவல வாழ்வையும், வாழ்க்கைப் போராட்டத்திற் சிக்கித் தவித்து அவஸ்தைகளுக்குள்ளாகி அவர்கள் இடும் ஓலங்களையும் பண்ணையாளர்கள் – தேயிலைத் தோட்ட அதிகாரிகள் போன்ற பெரிய மனிதர்களின் சிறுமைத் தனங்களையும் மனப்பொருமலுடனும் ஆத்திரத்துடனும் எரிச்சலுடனும் வேதனைச் சிரிப்புடனும் எலும்பின் குருத்துக்களையே சிலிர்க்க வைக்கும் சோகக் குரலுடனும் திரைப்படக் காட்சிபோற் காட்டியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஆசிரியர், கதையின் தொடக்கத்தில் எடுத்த எடுப்பிலேயே தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புகள் அமைந்த ஒதுக்குப்புறமான வாசவன்பட்டிக் கிராமப் பகுதியையும் அதன் சூழலையும் தத்ரூபமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். ஏறத்தாழ கதையின் முதல் ஒன்பது பக்கங்களில், பின்னால் நிகழவிருக்கும் அவலங்களுக்கு அத்திவாரமாக அமையும் வகையிற் காணப்பட்ட வாசவன் பட்டிக்கிராமத்தின் சமூக அமைப்பையும் சமூக உறவுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் தாழ்த்தப்பட்ட மக்களின் இரங்கத்தக்க வாழ்க்கைநிலை, நம்பிக்கைகள், வாழ்வியற் சிந்தனைகள், ஆசை நிராசைகள், ஏக்கங்கள், வாழ்க்கைப் போராட்டங்கள் முதலியவற்றையும் கச்சிதமாகக் கதைப்போக்கோடு ஒட்டி விளக்கியுள்ளார்.

"வாசவன்பட்டிக் கிராமம் பற்றித் திருநெல்வெலி ஜில்லா வாசிகளுக்குக் கூடத் தெரியாது. ஜில்லாப் படத்திலும் அந்தப் பெயர் கிடையாது. காரணம்; அது ஜில்லாப் படத்தின் மதிப்புக்குக்கூடக் குறைந்த கிராமம். பெற்றோல் நாகரிகத்தின் சின்னமான தார்பூசிய வீதிகள்கூடத் தங்கள் மதிப்பிற் குறைந்தது என எண்ணி, அக்கிராமத்திலிருந்து ஒன்றரை மைலுக்கப்பாலேயே செல்கின்றன. ஊரைச் சுற்றிலும் பனங்கூடலும் முள்ளும் சோற்றுக் கத்தாழையும்; 'வாசவன் பட்டிக் கிராமத்திற்குரிய பெருவீதி, ஒற்றையடிப் பாதையே' என வாசவன்பட்டிக் கிராமத்தின் மதிப்பினை – மதிப்பின்மையை, தமக்கேயுரிய நையாண்டி வார்த்தைகளில் விளக்கிச் சொல்லும் ஆசிரியர், படம் பிடித்துக் காட்டுவது போன்று கோவில், அர்ச்சகர் வீடு, அக்கிரகாரம், பிள்ளையார் வீதி, பண்ணையார் நல்ல குற்றாலம் பிள்ளையின் பெரிய வீடு, பண்ணையாரின் வயல்களை வாரமாகவோ குத்தகையாகவோ எடுத்துப் பயிர் செய்து வாழ்பவர்களின் குடிசை வீடுகள், ஊர்காவல் தெய்வமாகிய சுடலைமாடப் பெருமானின் பீடம், அதனையடுத்து அமைந்திருந்த மறவர் குடிசைகள், அதனைத்தாண்டி அமைந்திருந்த பறையர் சேரி என அச்சமுதாய அமைப்பையே தத்ரூபமாக, கண்முன் நிறுத்திக் காட்டுகிறார்."[11]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கண்ட விளக்கம், புதுமைப்பித்தனின் வெறுங்கற்பனையல்ல. அவர்தம் வாழ்நாளில் நேரிற்கண்டும் கேட்டும், கற்றும் அறிந்த உண்மைகளையே, வேதனையுடன் காட்டியுள்ளார்.

புதுமைப்பித்தன் காலத்தில் மட்டுமல்ல, அவருக்கு முன்பும் இதே நிலைதான். இன்றுங்கூடத் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான வாசவன் பட்டிக் கிராமங்களையும் பள்ளர், மறவர் குடிசைகளையும் பறையர், சக்கிலியர், சண்டாளர் சேரிகளையும் நாம் நேரிற்காண முடிகின்றது. புதுமைப்பித்தன் காட்டிய வாசவன்பட்டிக் கிராம அமைப்பு, குடிசைவீடுகள், சேரிகள், பண்ணையாரின் பெரியவீடு முதலியனவும் மலையகத் தொழிலாளர்கள் குடியேற்றப்பட்ட தோட்டங்களில் அவர்களுக்கு இருப்பிடமாக அளிக்கப்பட்ட 'லயன்கள்', தோட்ட அதிகாரிகளின் வீடுகள், தோட்டத்துரையின் 'பங்களா' முதலியனவும் பெருமளவிற்கு ஒற்றுமையுடையனவாக இருத்தல் கவனிக்கத்தக்கது.

புதுமைப்பித்தன் காட்டும் வாசவன்பட்டிக் கிராமங்களும், பள்ளர், பறையர்களும், அவருக்கும் முன்னதாகக் கோபாலகிருஷ்ண பாரதியார் காட்டும் புலைப்பாடிகளும் நந்தன்களும், அவருக்கும் முன்னதாகப் பள்ளு இலக்கிய ஆசிரியர்கள் காட்டும் பள்ளர் சேரிகளும் பள்ளர்களும், குறவஞ்சி ஆசிரியர்கள் காட்டும் குறவர்களும் அவர்களுக்கும் முன்னதாகப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பெரியபுராணம் பாடியருளிய சேக்கிழார் காட்டும் ஊருக்குப் புறத்தே அமைந்த 'புற்குரம்பைக் குடில்கள் பல நிறைந்த' புலையர் பாடிகளும், அவருக்கும் பல நூற்றாண்டுகள் முன்னதாகச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவும், மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரும் காட்டும் புறஞ்சேரிகளும் அறக்கோட்டங்களும் மனித நேயம் பூண்ட எவரது உள்ளத்தையும் உறுத்துவனவாக அமைந்துள்ளன.

இன்றைய மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மூதாதையர்கள், மேலே காட்டப்பட்டவர்களே என்பதிற் சிறிதும் ஐயமில்லை. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகாலத் தமிழக வரலாற்றைக் கூர்ந்து நோக்குமிடத்து, தமிழர்களே தம்முள் ஒரு பெரும் பகுதியினரைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமயம், சாதி, சாத்திரம், பாவபுண்ணியம் முதலியவற்றின் துணைக் கொண்டு மீளா அடிமைகளாக்கி, அவர்களது உழைப்பினைக் கொடூரமாகச் சுரண்டிச் சுகபோகமனுபவித்து வந்தனர் என்பது புலப்படும்.

தமிழக வரலாற்றிற் கிறிஸ்தாப்த காலத்துக்குச் சற்று முன்னும் பின்னுமாக மெல்லமெல்ல அரும்பத் தொடங்கிய நிலவுடைமை – நிலப்பிரபுத்துவ ஆதிக்கமானது கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து, அதாவது பல்லவப் பேரரசர் காலத்தில் ஆழ அகலமாக வேரூன்றி, சோழப் பேரரசர் காலத்தில் உச்சநிலையை அடையலாயிற்று. விசயநகர நாயக்கர் காலப் பகுதியிலே தொடர்ந்தும் நிலவுடைமை ஆதிக்கம் பெருவலிமையுடன் திகழ்ந்ததாயினும் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் குறிப்பாக, பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியின் போதும் அதனைத் தொடர்ந்தும் சிறிது சிறிதாகத் தளரத் தொடங்கியது.[13]

பிரித்தானியராட்சிக் காலப்பகுதியில் வரவேற்கத்தக்க நல்ல பல மாற்றங்கள் ஏற்பட்டபோதும் நிலவுடைமை ஆதிக்கமும், அதனுடன் பின்னிப் பிணைந்திருந்த பண்ணை அடிமை முறை, சாதி, சமயாசாரங்கள், வழமைகள், நம்பிக்கைகள் முதலியனவும் அடியோடு அழியவில்லை. மாறாக நிலவுடைமை ஆதிக்கமானது காலத்துக்கேற்பத் தன்னை மாற்றிக் கொண்டு புது வடிவம் பெறலாயிற்று.

### விதிமுறைகளின் இறுக்கம்

நிலவுடைமை ஆதிக்கத்தின் பிரிக்க முடியாத அம்சங்களாகப் பண்ணை அடிமை முறை, சாதி, சமயாசாரங்கள், அவற்றின் அமைப்பு முறைகள் முதலியன அமைந்திருந்தன. காலத்துக்குக் காலம், நிலவுடைமை ஆதிக்கமானது வலிமைபெற்று வளர்ந்து வந்தபோது பண்ணை அடிமை முறை, சாதி, சமயாசாரங்கள், நெறிமுறைகள், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் முதலியனவும் அவற்றைக் கட்டிக் காப்பதற்கான விதிமுறைகளும் மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூகத்தின் பெரும் பகுதியினர், குறிப்பாக உடலுழைப்பாளிகள், சூத்திரர் என முத்திரை குத்தப்பட்டு உடலுழைப்புக்கு மட்டும் தகுதியாக்கப்பட்டனர். ஆரம்பத்திற் சூத்திரர் ஒரு பிரிவினராகக் கணிக்கப்பட்டாலும், காலப்போக்கில் சூத்திரருள்ளும் நூற்றுக் கணக்கான உபசாதியினர் – தாழ்த்தப்பட்டவர்களாக உருவாக்கப்பட்டனர். அவர்கள் எவ்வகையிலும் தலையெடுக்காவண்ணம் சுகபோக வர்க்கத்தினர் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, சமயம் முதலிய துறைகளைப் பயன்படுத்திக் கொண்டனர். சூத்திரர்களது உழைப்பினாற் கிடைக்கும் வருவாயின் பெரும் பகுதியைத் தமதாக்கிக் கொள்வதில் சுகபோக வர்க்கத்தினர் கண்ணுங்கருத்துமாக இருந்தனர். உடலுழைப்பாளிகளைத் துஞ்சவும் விடாது, விஞ்சவும் விடாது கவனித்துக்கொண்டனர்.

சமூகத்தின் தாழ்ந்த படித்தரங்களில் நசுங்குண்டு வாழ்க்கைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த உழைக்கும் வர்க்கத்தினர், என்றுமே தலைநிமிராவண்ணம், அவர்களது அகமும் புறமும் கட்டுப்படுத்தப் பட்டிருந்தன. உழைக்கும் வர்க்கத்தினர் தமது தாழ்வுற்ற நிலைமைக்கான உண்மைக் காரணங்களை என்றும் அறிந்துகொள்ளாத வகையில் அவர்களுக்குக் கல்வி விருத்தி மறுக்கப்பட்டிருந்தது. கூடவே உழைக்கும் வர்க்கத்தினரின் தாழ்வுற்ற நிலைமைக்கும், துன்ப துயரங்களுக்கும் அவர்கள் செய்த கன்மவினைகளும் பிறவுமே காரணங்கள் எனச் சமயம், சமய சாஸ்திரங்கள், தெய்வங்கள் முதலியவற்றின் பெயரால் வெவ்வேறு வழிகளிலும் வெவ்வேறு வகையிலும் போதிக்கப்பட்டன.

உழைக்கும் வர்க்கத்தினர், தமது அறியாமை இருளிலிருந்து வெளியேறாவண்ணம் பாதுகாத்துக் கொள்வதில், சுகபோக வர்க்கத்தினர் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இவ்வாறு உழைக்கும் வர்க்கத்தினரின் அகத்தைக் கட்டிவைத்த சுகபோக வர்க்கத்தினர், அவற்றையும் மீறி உழைக்கும் வர்க்கத்தினர் கிளர்ந்தெழுந்த போதெல்லாம் தமது அரசியல், பொருளாதார பலத்தினால் அவர்களை இலகுவாக அடக்கி ஆளவும் முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கண்ட தமிழ் நாட்டுத் தொழிலாளர் நிலைமைகளையும், அவர்களை அத்தகைய நிலையில் வைத்திருப்பதற்குச் சமூக பொருளாதார மேலாதிக்கம் செலுத்தியோர் கையாண்ட உபாயங்களையும் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் வழித்தோன்றல்களான [14] இலங்கையின் மலையகத் தொழிலாளர்களின் நிலைமைகளையும், அவர்களை அத்தகைய நிலையில் வைத்திருப்பதற்குத் தோட்ட உடைமையாளர்களும் அதிகாரிகளும் கையாளும் உபாயங்களையும் ஒப்பு நோக்குமிடத்து, அவற்றுக்கிடையே உள்ள நெருங்கிய ஒற்றுமைகள் புலப்படும்.

சுருங்கக் கூறின், பண்டைய மேலைநாடுகள் சிலவற்றிலும் மத்திய ஆசியாவிலும் இடம் பெற்றிருந்ததைப் போன்றதொரு 'அடிமை முறை' தொடக்கத்தில் வட இந்தியாவிலும், காலப்போக்கில் தென் இந்தியாவிலும் இடம் பெறலாயிற்று. மேலை நாடுகளில் வெளிப்படையாகவே, அடிமை முறையும் சுரண்டலும் இடம் பெற்றன. ஆயின் இந்தியாவில் வருணம், சாதி, குலம், கோத்திரம், சமயம், சாத்திரம், கன்மவினைக் கோட்பாடு, மறு பிறப்புக் கொள்கை முதலிய திரைகளுக்குப் பின்னால், மிகச் சாமர்த்தியமான முறையில் அடிமை முறையும், சுரண்டலும் இடம் பெற்றன. இதுபற்றி வரலாற்றாசிரியர் ஒருவர், "....... புராதன கிரீஸ், ரோம், சில மேற்காசிய நாடுகள் ஆகியவைகளில் உருவான அடிமை முறை அமைப்புக்கும், இந்தியாவில் உருவான இந்த வருண ஜாதி அமைப்புக்குமிடையில், அடிப்படையான வேற்றுமைகள் ஒன்றுமில்லை. அடிமை முறையைப் போலவே வருண ஜாதி முறையினுடையவும் முக்கியமான அம்சம் சுரண்டுவோர் – சுரண்டப்படுவோரிடையேயுள்ள முரண்பாடுதான். ஒன்றில், அடிமைகள் என்று பகிரங்கமாக அழைக்கப்பட்ட பெரும்பான்மையான மக்கள் சுரண்டலுக்கு இரையாக்கப்படுகின்றார்கள். மற்றொன்றில், ஜாதி என்ற திரையைப் பிடித்துக் கொண்டுள்ளார்கள். இந்த வித்தியாசம்தான் உள்ளது." [15] எனக் கூறியுள்ளமை மனங்கொளத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழகத்தின் புகழ்பூத்த வரலாற்றுக் காலகட்டமாகக் கொள்ளப்படும் செல்வச் செழிப்புமிக்க சோழப் பேரரசர் காலத்திற்கூட, மேற்கண்ட நிலைமைகள் மிக இறுக்கமாக இடம் பெற்றிருந்தமையையும், மனுதர்ம சாஸ்திர விதிகளைப் பின்பற்றி அரச தர்மமும் சாதி தர்மமும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டமையையும், அவற்றை மீறும் உழைக்கும் வர்க்கத்தினர் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டமையையும் அக்கால வரலாற்றுச் சான்றுகள் நிரூபித்து நிற்கின்றன.

எடுத்துக்காட்டாக : புகழ்பூத்த முதலாம் இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் வரிப்பளுவினைத் தாங்கமாட்டாத சூத்திரர்கள் – தாழ்த்தப்பட்ட உழைக்கும் வர்க்கத்தினர், வரி எதிர்ப்புப் போராட்டம் நடத்திய மையினையும் அப்போராட்டம் கொடூரமாக நசுக்கப்பட்டமையினையும், அதே சமயம் விசேட சலுகைகள் – வரி நீக்கம் முதலியன கோரிக் கிளர்ந்தெழுந்த பிராமணர்களுக்கு கொடுந் தண்டனை வழங்கப்படாதது மட்டுமின்றிச் சலுகைகள் வழங்கப்பட்டமையினையும் அக்கால்ச் சாசனங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.[16]

பல்லவ, சோழப் பேரரசர் காலப்பகுதிகளிலும் அடுத்துவரும் காலப்பகுதிகளிலும், மனுதர்ம சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதற்கமைய, ஏனையோருக்கு அடங்கி அழுக்காறு கொள்ளாது இரவு பகல் ஓயாது பணிபுரிதல் ஒன்றே சூத்திரர்களின் தலையாய கடமை என்பதும், பணிபுரிய வேண்டுமே தவிரப் பலனை எதிர்பார்க்கக்கூடாது என்பதும், முக்கிய நியதிகளாகக் கொள்ளப்பட்டன. இந்நியதிகளை மீறும் சூத்திரன் நாத்திகனாகவும், சமூகத்துரோகியாகவும், சமூகப் பிரஷ்டம் செய்யப்பட வேண்டியவனாகவும் கருதப்பட்டுக் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டான். இதே விதிமுறைகள் சிற்சில வேறுபாடுகளுடன் இன்றைய மலையகத் தோட்ட நிர்வாக முறைக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்துமாற்றை ஒப்பு நோக்கி அறியலாம்.[17]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## செல்வச் செழிப்பு

சோழப் பேரரசர் காலப்பகுதியில், பல்வேறு வழிகளிலும் ஈட்டப் பட்ட செல்வ மிகுதியினாற் பேரரசு செல்வச் செழிப்புடன் திகழ்ந்தது. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக, நாட்டிலே அமைதி நிலவியது; பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது; கிராம சமூக அமைப்பும், உள்ளூராட்சி முறையும் வலிமை பெற்றுத் திகழ்ந்தன. இத்தகைய சூழ்நிலைகள் காரணமாகச் சமூகத்தின் தாழ்ந்த படித்தரங்களில் வாழ்ந்த உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்க்கைநிலை, போற்றத்தகுந்ததாக இருக்காவிடினும் மகாபரிதாபத்திற்குரிய நிலைக்குத் தள்ளப் படவில்லையெனலாம்.

சோழப் பேரரசர் காலப் பகுதியிலே, தாழ்த்தப்பட்ட உழைக்கும் வர்க்கத்தினர் எவ்வளவுதான் கேவலமாக நடத்தப்பட்டபோதும் துயரங்களுக்குள்ளாகிய போதும், மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்த போதும் அவர்களுக்கெனச் சில உரிமைகளும் சலுகைகளும் அறத்தின் பெயரால் வழங்கப்பட்டிருந்தன. தாழ்த்தப்பட்ட மக்கள், அயலூர்களுக்கும் கோயில்களுக்கும் சென்றுவர முடிந்தது. தாம் விரும்பாதவிடத்து, தத்தமது குலத்தொழிலை விடுத்து, வேறு தொழில்களில் ஈடுபட உரிமை இருந்தது. அதேபோன்று, தமது உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப்பெற முடியாதவிடத்தும் அக்கால மானிய அடிப்படையில் 'உணவு உரிமை' – சீவனம் – இருந்தது. பசிக் கொடுமையைத் தீர்க்க வழியின்றித் தவித்தவர்களுக்கும், அக்காலத்திற் பெருஞ் செல்வச் செழிப்புமிக்க நிறுவனங்களாக விளங்கிய பிரமாண்டமான பல கோயில்கள் புகலிடமளித்து வயிற்றுத் தீயைத் தணித்தன. ஆயின், இவையாவும் அடுத்துவரும் காலப்பகுதிகளில் அவர்களுக்கு மறுக்கப்பட்டன.[18]

சோழப் பேரரசின் வீழ்ச்சியை அடுத்துவரும் காலகட்டங்களில் நிலைமைகள் மெல்லமெல்லத் தலைகீழாக மாறத் தொடங்கின. சோழப் பேரரசர் காலப்பகுதியில் உன்னத சிறப்புடன் விளங்கிய 'கிராம சமூக அமைப்பு முறை' சீரழியத் தொடங்கிற்று. நாட்டில் அமைதியின்மையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொந்தளிப்பும் அதிகரிக்கலாயின. நாட்டின் பொருளாதாரநிலை சீர்கேடடையலாயிற்று. இத்தகைய நிலைமைகள், சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்த 'அன்றாடம் காய்ச்சிகளான' உழைக்கும் வர்க்கத்தினரையே படுபயங்கரமாகப் பாதிக்கலாயின. அவலங்களில் அதல பாதாளத்திற்கு அவர்கள் தள்ளப்பட்டனர். அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்கள் கூட சமூகத்தின் மேல் மட்டத்தினரைப் பாதித்ததில்லை; சமூகத்தின் அடிமட்டத்து மக்களையே வெகுவாகப் பாதித்து அவர்களது உயிர்களைக் குடித்து ஏப்பம் விட்டன.

மிகப் பாரதூரமான முறையிலே சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் சுரண்டல் முறைகளும் அதிகரித்தன. கொடுமைகளும் அக்கிரமங்களும் கொள்ளையடிப்புகளும் சுரண்டலும் எல்லையற்று இடம் பெற்றன.

சோழப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, சிலகாலம், இரண்டாம் பாண்டியப் பேரரசு சிறப்புடன் விளங்கிற்று. ஆயின், அதனைத் தொடர்ந்து குறிப்பாக கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே தமிழகத்தை உள்ளடக்கிய தென்னிந்தியா முழுவதிலும் பெருங் குழப்பங்களும் கொந்தழிப்புகளும் அந்நியரின் படையெடுப்புகள், கொள்ளையடிப்புகள் முதலியனவும் தொடர்ச்சியாக இடம் பெற்றமையால் நாடு அமைதி இழந்து தவித்தது. மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்குள்ளாகினர். நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகள் சீர்கேடுற்றன.

இந்திய வரலாற்றாசிரியர்களிடையே வேறுவேறு விடயங்களிற் கருத்து முரண்பாடுகள் நிலவினாலும், மேற்கண்ட உண்மைகளை ஒரே குரலில் ஏக மனதாகவே தெரிவித்துள்ளனர். தென்னிந்திய வரலாற்றறிஞர் எனப் போற்றப்படும் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி முதல் டி.வி மகாலிங்கம், கிருஷ்ணசுவாமி, தி.நா. சுப்பிரமணியன், கோசாம்பி, முகர்ஜி முதலியோர் தெரிவித்துள்ள கருத்துகள் இவ்வகையிலே நோக்கத் தக்கவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோழப் பேரரசின் வீழ்ச்சியையடுத்துத் தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார அமைப்பு முறையின் அடிப்படை அம்சங்களாக விளங்கிய நிலமானிய அமைப்பு முறையும், அதனுடன் பின்னிப் பிணைந்திருந்த சாதி அமைப்பு முறை, சாதி, சமயாசாரங்கள் முதலியன மேன்மேலும் இறுக்கம் பெறலாயின. சோழரின் பின், தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திய பாண்டியர், இஸ்லாமியர், விசயநகர நாயக்கர், மராட்டியர், பிரித்தானியர் தவிர்ந்த ஏனைய ஐரோப்பியர் ஆகியோரது ஆட்சிக் காலப்பகுதிகளிற் கூட, மேற்கண்ட அம்சங்களிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏவையும் ஏற்படவில்லை. ஆயின், பிரித்தானியர் ஆட்சி நிலை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் ஏற்படலாயின.

கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியளவில் விசயநகரப் பேரரசு தோற்றம் பெற்று வலிமையுறத் தொடங்கியதும், படிப்படியாக நாட்டின் சீர்கேடான நிலைமைகள் மாறத் தொடங்கின. ஆரம்பத்தில், விசயநகரப் பேரரசின் நேரடி ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த தமிழ்நாடு, காலப்போக்கில் விசயநகரப் பேரரசின் பிரதிநிதிகளான நாயக்க மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டது.

விசயநகர–நாயக்க மன்னர்கள் (கி.பி. பதினான்காம் நூற்றாண்டு தொடக்கம் பதினேழாம் நூற்றாண்டு இறுதிவரை) சமயத்தின் காவலர்களாக மட்டுமின்றிச் சாதியின் காவலர்களாகவும், தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டு செயற்பட்டனர். அவர்களது ஆட்சிக் காலப்பகுதியில், முன்னர் என்றும் இல்லாத அளவிற்குச் சாதி அமைப்பு முறைகளும், சாதி சமயாசாரங்களும் ஒன்றுடன் ஒன்று மிக இறுக்கமான முறையிற் பின்னிப் பிணைக்கப்பட்டன. அதுகாலவரை தமிழகத்தில் நிலவிய சாதிப் பிரிவினைகள் போதாவென, மேன்மேலும் புதிய புதிய சாதிகள் தமிழகத்திற்கு வடக்கேயிருந்து வந்து சேர்ந்தன. ஒவ்வொரு சாதிக்குள்ளும், பல உபசாதிகள் தோற்றுவிக்கப்பட்டன. எடுத்துக் காட்டாகப் பாஞ்சாலருள் எழுபத்து நான்கு பிரிவுகள் காணப்பட்டன. கம்மாளருள் கொல்லர், பொற்கொல்லர், தச்சர், விக்கிரம் செய்வோர், பித்தளை வேலை செய்வோர் எனப் பல பிரிவினர் காணப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆயிரம் சாதிகள்

தொம்பரர், கைக்கோளர், தோட்டியர், தனக்காரர், சிவியார், சேணியர், பாஞ்சாலர், சாயக்காரர், நூல் நூற்போர், சௌராஷ்டிரர், ரெட்டிகள், மயிர்வினைஞர், வண்ணார், இடங்கை–வலங்கையினர், நுளைஞர், பள்ளர், பறையர், குறவர், சக்கிலியர், சண்டாளர், கம்மாளர் எனச் சாதி வகைகளில் பட்டியல் நீண்டுகொண்டே சென்றது. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இந்துக்களுள் 2370க்கும் (இரண்டாயிரத்து முந்நூற்று எழுபது) மேற்பட்ட சாதிகள் காணப்பட்டமையை, இந்திய சமுதாய வரலாறு சுட்டிக்காட்டுகின்றது.[19]

இத்தகைய நிலைமைகள் இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்வதைக் கண்ணுற்ற பாரதியார் மனப் பொருமலுடன்,

'நெஞ்சு பொறுக்குதிலையே – இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்,
கொஞ்சமோ பிரிவினைகள்? – ஒரு
கோடி என்றால் அது பெரிதாமோ?'

எனப் பாடியுள்ளதுடன் அமையாது 'ஜாதிக் குழப்பம்' என்னும் கட்டுரையில் மிகுந்த கவலையுடன் பின்வருமாறு கூறியுள்ளார் :

"இங்ஙனம் ஜாதிக்கொள்கை வேரூன்றிக் கிடக்கும் நாட்டில் மனுஷ்ய ஸ்வதந்திரம், ஸமத்துவம், சகோதரத்துவம் என்னும் கொள்கைகளை நிலை நிறுத்துவதென்றால் அது சாதாரண வேலையா? கொஞ்ச ஜாதியா? அவற்றில் உட்பிரிவுகள் கொஞ்சமா? பறை பதினெட்டாம்! நுளை நூற்றெட்டாம்! அதாவது பறையர்களுக்குள்ளே 18 பகுதிகளும், நுளையர்களுள் 108 பகுதிகளும் இருக்கின்றனவாம். மேலும் பறையன், பள்ளன், சக்கிலியன், எல்லோரும் வெவ்வேறு ஜாதிகள். ஒன்றுக்கொன்று பந்தி போஜனம் கிடையாது. பெண்கொடுக்கல் வாங்கல் கிடையாது. கேலி! கேலி!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெருங்கேலி! இங்ஙனம் ஏற்கனவே மலிந்து கிடக்கும் பிரிவுகள் போதாவென்று, புதிய புதிய பிரிவுகள் நாள்தோறும் ஏற்பட்டு வருகின்றன........."[20]

ஒவ்வொரு பகுதியினரும் தத்தமக்கென ஒதுக்கப்பட்ட தொழில் முறைகள், ஆசார அனுஷ்டானங்கள் முதலியவற்றை எக்காரணம் கொண்டும் மீறமுடியாது. மீறுவோர் கடுமையான தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். தாழ்த்தப்பட்ட மக்கள் தமக்கோ தமது பிள்ளைகளுக்கோ நாமகரணஞ் சூட்டுதல், உடை-அணிவகைகள், வழிபடுதெய்வங்கள், குடியிருப்புகள் முதலியவற்றிலும் கூட, அவர்களுக்கென விதிக்கப்பட்ட விதிமுறைகளை மீறக்கூடாது. தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புகள் ஊரின் ஒதுக்குப் புறத்தேயமைந்த சேரிப்புறங்களாக விளங்கின. முன்னைய காலப்பகுதிகளில் மட்டுமின்றி இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கூட, இவ்வாறு பலவகையிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒதுக்கப்பட்டிருந்தமையைப் புதுமைப்பித்தன் தமது 'துன்பக் கேணி' என்னும் சிறுகதையிலே திறம்படத் தத்ரூபமாக சித்தரித்துள்ளார். அக்கதையிலே அவர் காட்டும் வாசவன்பட்டிக் கிராமமும், அதன் சுற்றுப்புறங்களும் அவர்களது பெயர்களும் அவர்களுக்கும் எஜமானர்களுக்குமிடையிலான உறவுகளும் உன்னிப்பாக நோக்கத்தக்கவை.

புதுமைப்பித்தன் காலத்தில் மட்டுமல்ல, மிக அண்மைக்காலம் வரையிலும் தமிழகத்திலும் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும், இத்தகைய நிலைமைகளிற் பெருமாற்றங்கள் எவையும் ஏற்பட்டதில்லை. இலங்கையின் வடபகுதியில் கடந்த நான்கு, ஐந்து தசாப்தங்களிலும் அதற்கு முன்பும் இடம்பெற்ற சாதிக் கொடுமைகளை மிகச் சிறந்த முறையில் டானியல், டொமினிக் ஜீவா, கணேசலிங்கன், கதிர்காமநாதன், ரகுநாதன், தெணியான், அகஸ்தியர், யோகநாதன், எஸ். பொன்னுத்துரை, சோமகாந்தன் முதலியோர் தமது ஆக்கங்களில் வெளிப்படுத்தியுள்ளமை அவதானிக்கத்தக்கது.[21]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கூறப்பட்ட நிலைமைகள், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்தக்கூடியதே. தோட்டத் தொழிலாளர்களின் பெயர்கள், தோட்டத்து அதிகாரிகள் அவர்களுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகள், அடக்குமுறைகள், அலட்சிய மனோபாவம், தொழிலாளர்களை நடாத்தும் பாங்கு, குடியிருப்புகள், தொழிலாளரின் வழிபடுதெய்வங்கள், வழிபாட்டு முறைகள், சமயாசாரங்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலிய யாவும் மேற்கூறப்பட்டவற்றுடன் பெருமளவு ஒத்திருப்பதை அவதானிக்கலாம். ஏலவே கூறியுள்ளதுபோல், நாம் மேலேகண்ட தாழ்த்தப்பட்ட மக்கள், உடலுழைப்பாளிகள் முதலியோரின் சந்ததியினரே இன்றைய மலையகத் தோட்டத் தொழிலாளர்களுள் மிகப் பெரும்பாலோராவர். அதேபோன்று பர்மா, றீயூனியன், மொரிசியஸ், ரிறினிடாட் முதலிய தீவுகளிலும் நாடுகளிலும் கொண்டு சென்று குடியேற்றப்பட்ட தொழிலாளர்களுள் மிகப் பெரும் பகுதியினர் தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட மக்களின் சந்ததியினரேயாவர். இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களும் இத்தகையோரே என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் விசயநகர – நாயக்கர் காலப் பகுதியிலேயே, முன்னர் என்றும் இல்லாத அளவிற்குத் தமிழகத்திலே பிராமணர்களின் ஆதிக்கம், உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. பிராமணர்கள் பெரும் நிலப்பிரபுக்களாகவும், அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாகவும், பிரதானிகளாகவும், இராயசங்களாகவும் விளங்கினர். இவை தமிழகத்திலே பிற்காலத்தில் எத்தகைய விளைவுகளைத் தோற்றுவித்தன என்பதை இங்கு விளக்கிக் கூறத்தேவையில்லை.

விசயநகர – நாயக்கர் காலப் பகுதியிலிருந்தே முன்னர் என்றும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தின் தாழ்ந்த படித்தரங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலை அதலபாதாளத்தை எட்டத் தொடங்கிற்று. தமிழகத்தின் வளம் மிகுந்த நிலப்பரப்பிற் பெரும்பகுதி பிராமணர்களின் உடைமையாயிற்று; மிகுதி நிலங்கள் சமூகத்தின் மேல்மட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்த வணிகர், உழுவித்துண்ணும் வேளாளர் முதலியோரிடம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிக்கிக்கொண்டது. இந்நிலையில், சமூகத்தின் தாழ்ந்த படித்தரங்களில் வாழ்ந்து கொண்டிருந்த கோடிக்கணக்கான உடலுழைப்பாளிகள் சொந்த நிலமின்றி, சுதந்திரமின்றி நிலப்பிரபுக்களின் நிலங்களிற் பண்ணை அடிமைகளாகவும், விவசாயம் தவிர்ந்த பிற தொழில்களில் ஈடுபட்டோர், நிலப்பிரபுக்களின் தயவிலும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாயிற்று.

பண்ணை அடிமைகளாக வாழ்ந்த உடலுழைப்பாளிகளுக்கு, எவ்வித உரிமைகளோ சுதந்திரமோ சொத்துரிமையோ கிடையாது. அவர்கள் நிலப்பிரபுக்களுக்கு வாழ்நாளெல்லாம் பணிவிடை செய்வதொன்றையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். பணிவிடை செய்ய மறுத்தாலோ, உரிமை கோரினாலோ, நிலப்பிரபுக்களின் கட்டளைகளை மீறினாலோ மனிதாபிமானமற்ற முறையிற் குரூரமாகத் தண்டிக்கப்பட்டனர்.

**கடனாதிக்கம்**

இதுபற்றி வரலாற்றறிஞர் ராதா கமால் முகர்ஜி தமது 'இந்தியாவின் நிலப் பிரச்சினைகள்' என்னும் நூலில், "இந்தியாவின் பொருளாதார ஏணியின் அடித்தட்டில் நிரந்தர விவசாயத் தொழிலாளர் நிற்கின்றனர். இவர்கள் கூலிப்பணம் பெறுவது அபூர்வம். இவர்கள் அடிமைகளாக வாழ்கிறார்கள். தேசத்தின் பல பாகங்களிலுமுள்ள சம்பிரதாயப்படி ஜமீன்தார் அல்லது மிராசுதார் தங்கள் வேலைக்காரனை கடன் வாங்கும்படி செய்து, அதன் மூலம் அவன் மீது ஆதிக்கம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவன் சந்ததி மீதே, இதன் மூலம் அவர்களுக்கு ஆதிக்கம் ஏற்படுகிறது.

"பம்பாய் இராஜதானியில் துப்ளாக்களும், கோலிகளும் இருக்கின்றனர். இவர்கள் ஏறத்தாழ அடிமைகளே. தங்கள் எஜமானர்களிடம் இவர்களிற் பல குடும்பங்கள் பல தலைமுறைகளாக வேலை செய்து வந்திருக்கின்றனர். தென்மேற்குச் சென்னையில் ஈழவர்கள், புலையர்கள், செருமன்கள், கோவியர்கள் முதலியவர் களெல்லோரும் நடைமுறையில் அடிமைகளாகவே நடத்தப்படுகிறார்கள். கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தில், நிலத்தின் மீது பிராமணருடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதிக்கம் பலமானது; விவசாயத் தொழிலாளருள் பெரும்பான்மையோர் தீண்டத்தகாதவர்களாக நடத்தப்படுகின்றனர். அவர்களிற் பலர் 'பண்ணையடிமைகள்'........ கடன் கொடுத்தவன் இறந்தாலும், நிலத்தை விற்றாலும் பண்ணையடிமைகள் நிலச்சுவான்தாருக்குக் கைமாற்றிக் கொடுக்கப்படுகிறார்கள். ..........." [22] எனக் கூறியுள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

இத்தகைய நிலைமைகள் விசயநகர – நாயக்கர் காலப் பகுதியிலிருந்து சிற்சில மாறுதல்களுக்கும் நெளிவு சுழிவுகளுக்கும் உட்பட்டு, இன்றுவரை தொடர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

மேற்கூறப்பட்ட அம்சங்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் எத்துணைப் பொருத்தமுடையன என்பதை அவதானிக்கலாம். உண்மையில், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மூதாதையர்களே தமிழகத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக மீளா அடிமைகளாக்கப்பட்டிருந்தனர். கடந்த இரண்டாயிரமாண்டுக் காலத் தமிழகச் சமூக வரலாற்றை மனிதாபிமானத்துடன் மிக உன்னிப்பாக அவதானிக்கும் போது, பஞ்சப்பட்ட அந்த அப்பாவி மக்களின் இன்னல்களும் பரிதாபகரமான நிலையும் காலத்துக்கு காலம் அதிகரித்து வந்தமையினையும் அவர்களது அவலக்குரல் ஈனஸ்வரமாகவும் உள்ளத்தை உருக்கும் சோக கீதமாகவும் ஆழமான கிணற்றின் அடி ஆழத்திலிருந்து கேட்பது போல் ஒலிப்பதையும், உணர முடிகின்றது.

இவ் அப்பாவி மக்கள், அங்கு தமிழகப் பண்ணைகளில் தமிழர்களாலேயே அடிமைகளாக்கப்பட்டிருந்தனர். அவர்களது சந்ததியினர் இங்கு மலையகத் தோட்டங்களில் அந்நியராலும் தம் இனத்தவராலும் அடிமைகளாக்கப்பட்டனர். மேற்கண்ட உண்மைகளை அறிந்தோ அறியாமலோ 'துன்பக்கேணி', 'தூரத்துப் பச்சை' முதலிய சிறுகதைகளும் நாவல்களும் விரிவாகச் சித்திரித்துள்ளன. இவை பற்றிப் பின்னர் விரிவாக நோக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரித்தானியர் ஆட்சி இந்தியாவில் நிலைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. எனினும், அத்தகைய மாற்றங்களால் சமூகத்தின் மேல்தட்டு வர்க்கத்தினரும், புதிதாக உருவாகிய மத்தியதர வர்க்கத்தினரும் பெருநன்மைகளையும் சிறப்புச் சலுகைகளையும் பெற்று முன்னேறும் வாய்ப்புக் கிடைத்தது. ஆரம்பகாலத் தமிழ் நாவல்களில் இத்தகைய நிலைமைகள் துல்லியமாகப் பிரதிபலிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். ஆயின் சமூகத்தின் அடித்தளத்தில் நசுக்குண்டு உழன்று கொண்டிருந்த ஏழைகளின் நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எவையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக, அவர்களது நிலைமை மேன்மேலும் மோசமாகியது.

பிரித்தானியர் ஆட்சியின் விளைவாக நிலப்பிரபுத்துவத்தின் வலிமை சற்றே தளர்ந்ததேயொழிய, அழியவில்லை. மாறாக, புதிதாக உருவாகிய முதலாளித்துவம், மத்தியதர வர்க்கம் ஆகியவற்றுடன் சாமார்த்தியமான முறையில் நிலப் பிரபுத்துவம் இணைந்து கொண்டமையினை அவதானிக்கலாம். இதன் காரணமாக, சமூக பொருளாதார மேலாதிக்கம் என்றும் போல நிலப்பிரபுக்களிடமும் புதிதாக உருவாகிய முதலாளித்துவ வர்க்கத்திடமும் சிக்கிக் கொள்ளலாயிற்று. இது பற்றி வரலாற்றாசிரியர் ஒருவர், "........... ஆனால் இந்தியாவில் வளர்ந்துவந்த 'பூர்ஷ்வாக்கள்' கலப்பற்ற ஒரு வர்க்கமல்ல. அதில், நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் மிச்ச சொச்சங்களை ஏராளமாகக் காணலாம். நிலப்பிரபுத்துவ வர்க்கத்தைச் சேர்ந்த நபர்கள்தான், பின்னர் 'பூர்ஷ்வா' அறிவாளிகளாகவும், அதன்பின் தொழில் முதலாளிகளாகவும் மாறினர். தங்களுக்கு ஏற்பட்ட இந்தப் 'பூர்ஷ்வா' மாறுதலுக்குப் பிறகும், முன்போலவே நிலவுடைமை அமைப்புடன் இருந்த உறவை நீடித்து வந்தவர்கள்தான் அவர்களிற் பெரும்பாலானோர்.

"இது மட்டுமென்றி, வருண—ஜாதி முறையினுடையவும், மதச் சமுதாயங்களுடையவும் அடிப்படையில் உருவான ஒரு சமூக வாழ்க்கையை அவர்கள் பின்பற்றினர். ஜாதி, மதம் முதலிய முதலாளித்துவத்திற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முந்திய சமூக அமைப்பினுடையதான உணர்வும் சிந்தனையும் அவர்களிடையே அலைமோதிக் கொண்டிருக்கவும் செய்தன. இவ்வாறு முதலாளித்துவ அமைப்பிற்கு ஏற்றதான பொருளாதார உறவுகளோ, சமூக வாழ்க்கையோ, கலாச்சார முன்னேற்றமோ பூரணமாக உட்கொள்ள, இந்திய பூர்ஷ்வாக்களால் முடியவில்லை. (இன்றும் முடியவில்லை) பூர்ஷ்வா தலைமையில் இந்திய தேசிய இயக்கம் வளரத் தொடங்கிய போது அதற்குள் பலமான நிலப்பிரபுத்துவச் செல்வாக்கு ஏற்பட இந்தச் சூழ்நிலை வழிவகுத்தது. பிரான்ஸ் முதலிய நாடுகளில் ஏற்பட்டதைப் போன்ற ஒரு முழுமையான நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சி நடத்தி கிராமப்புற ஏழைகளை நிலப்பிரபுத்துவ – நிலவுடைமை ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க பூர்ஷ்வா தலைமையிலான இந்திய தேசிய இயக்கம் எக்காலத்திலும் முன்வரவில்லை. தேசியப் போராட்ட வரலாற்றில் மிக அதிகமான அளவில் மக்களை அணிதிரட்டிய காந்தி–நேரு காலத்தில் கூட சமஸ்தான மன்னர்கள், ஜமீன்தார்கள், மற்றும் பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் ஆகியோரின் அதிகாரங்களையும் உடைமைகளையும் நஷ்ட ஈடின்றி ஒழிப்பது என்ற பூர்ஷ்வா கண்ணோட்டத்துடன் பிரச்சினையை அணுகவில்லை.........."[23] எனக் கூறியுள்ளமை கூர்ந்து கவனிக்கத்தக்கது.

## சாதகமான சூழ்நிலை

இதன் காரணமாக பிரித்தானியராட்சி ஏற்படுவதற்கு முன்பு இந்தியாவிலும் அதன் ஒரு கூறான தமிழகத்திலும் சமூக, பொருளாதார ரீதியாக மேலாதிக்கம் பெற்றிருந்தவர்களே தொடர்ந்தும் பிரித்தானியராட்சிக் காலத்திலும் அதற்குப் பின்பும் கூடத் தமது மேலாதிக்கத்தைத் தொடர்ந்து நிலைநாட்டவும், பிரித்தானியர் ஆட்சி நிலைபெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட பலதுறை முன்னேற்றங்களால் விளைந்த பயன்களை அனுபவிக்கவும் – ஆங்கில மொழி அறிவு விருத்தி, நவீன கல்வி வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் – அரசியல், பொருளாதார, சமூக நடவடிக்கைகளிலும் நிர்வாகத் துறையிலும் முன்னணியில் நிற்கவும் ஏற்ற சாதகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது. இவ்வகையிலே, தமிழகத்தைப் பொறுத்த வரையில், பிராமணர்களே எல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வகையிலும் முதலிடம் வகிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகக் கல்வித் துறையையும் சமயத்தையும் பொருளாதாரத்தையும் தமது 'முதுசங்'களாக ஆக்கிக் கொண்ட பிராமண சமூகத்தினருக்கு, புதிதாக வந்து சேர்ந்த நவீன கல்வி முறை, ஆங்கிலக் கல்வி விருத்தி முதலியவற்றில் முன்னேறவும் அரசாங்க நீதி, நிர்வாகத் துறைகளில் முன்னணி வகிக்கவும் தமது சமூக, பொருளாதார மேலாதிக்கத்தை மேலும் வலுப்பெறச் செய்யவும், ஏற்ற வசதிகளும் வாய்ப்பும் கிடைத்தன.

இந்தியாவிலேயே அன்று மிகக்கொடூரமான முறையில் சாதி ஆசார இறுக்கமும் சாதித் திமிரும் சாதிக் கொடுமைகளும், தமிழகத்திலேயே காணப்பட்டது. ஏனையோரைக் காட்டிலும் வறுமையும் பஞ்சமும் தாழ்த்தப்பட்ட மக்களையே மிக மோசமாகத் தாக்கின. இது பற்றிப் பாரதியார் கூறியுள்ள கருத்துகள் சில வருமாறு :

"பெரும்பாலும் தாழ்ந்த ஜாதியார்களே அதிக ஏழைகளாக இருக்கிறார்களென்பது மறுக்க முடியாத விசயம். உழைப்பும் அவர்களுக்குத்தான் அதிகம். அதிக உழைப்பு நடத்திவரும் வகுப்பினருக்குள்ளே அதிக வலுவு ஏற்படும். அநீதி உலக முழுவதிலும் இருக்கிறது. எனினும், நம்முடைய தேசத்தைப் போல இத்தனை மோசமான நிலைமை வேறெங்கும் இல்லை."[24]

" ............ பசித்துன்பம் எல்லோருக்கும் பொதுவாக இருந்தாலும், கீழ் வகுப்பினரை அதிகமாகப் பாதிக்கிறது. நாட்டில் பஞ்சம் நேரிட்டால் பஞ்சமர் முதலிய தாழ்ந்த வகுப்பினர் அதிகமாகச் சாகிறார்கள். பறையரும் புலையரும் பள்ளரும் சக்கிலியரும் நம்மைப்போல் ஹிந்துக்கள் என்பதையும் விபூதி நாமம் போட்டுக் கொண்டு நமது தெய்வங்களையே வணங்குவோரென்பதையும் மடாதிபதி, புரோகிதர், குருக்கள், முதலியவர்கள் சற்றே மறந்துபோய் விட்டதாகத் தோன்றுகிறது. ......"[25]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



".......... இத்தனை கொடிய ஏழ்மை நிலையில் பெரும்பாலும் பள்ளர் பறையர்களும், சூத்திரர்களில் தாழ்ந்த வகுப்பினருமே இருக்கிறார்கள். ......... ஆனால் இந்தத் தேசத்தில் மற்ற ஜாதி ஏழைகளைக் காட்டிலும் பிராமண ஏழைகளுக்கு, முக்கியமாக வைதிகப் பிராமணர்களுக்கு இனாம் சாப்பாடு அதிகமாகக் கிடைக்கும் வழியேற்பட்டிருக்கிறது. .........."[26]

பிராமண சமூகத்தினருக்கு அடுத்த நிலையில் பிரித்தானியராட்சிக் காலத்தின்போது கிறிஸ்தவ மதத்தை தழுவிக்கொண்ட சுதேசக் கிறிஸ்தவர்களும், குலம், கோத்திரம் அடிப்படையிற் பிராமணருக்கு அடுத்த நிலையில் விளங்கியவர்களும், ஓரளவாயினும் பொருளாதார வசதியுடைவர்களும் பலதுறைகளிலும் முன்னேறும் வாய்ப்புக்கள் கிடைத்தன. எனினும், ஏலவே பெருவாய்ப்புகளையும் வசதிகளையும் பெற்றிருந்த பிராமண சமூகத்தினருடன் அவர்களாற் சமதையாக முன்னேறவோ அரசியல், சமூக, சமய, பொருளாதார நடவடிக்கைகளிற் பிராமண சமூகத்தினருடன் போட்டியிட்டு வலுவான ஆதிக்கம் செலுத்தவோ பெரும் நன்மைகளைப் பெறவோ முடியவில்லை. இந்நிலைமை, பிராமணரல்லாதவர்களுக்கு அடக்க முடியாத ஆத்திரத்தையும் மனக்குமுறலையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது.

இந்நிலையிலே, குமுறிவெடித்துக் கிளம்பியதே பிராமணர்–பிராமணரல்லாதார் வேறுபாட்டுணர்வும், ஆரியத் துவேஷமும் அவற்றின் அடிப்படையிலே தோற்றுவிக்கப்பட்ட சங்கங்களும் இயக்கங்களும் எனலாம். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஆரிய–பிராமண, எதிர்ப்பு இயக்கம் ஆரம்பத்திலே தென்னிந்திய நலவுரிமைச் சங்கமாகவும், நீதிக்கட்சியாகவும், காலப்போக்கில் சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு இயக்கம், தனித்தமிழ் இயக்கம், திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம், தமிழிசை இயக்கம், தமிழ் வளர்ச்சிக் கழகம் எனப் பல கிளைகளாகப் பெருகலாயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவை காரணமாக இருபதாம் நூற்றாண்டின், ஏறத்தாழ, மூன்றாம் நான்காம் ஐந்தாம் ஆறாம் தசாப்தங்களிலே தமிழகத்திற் பெரும் 'அமளி துமளிகள்' நடைபெற்றுக் கொண்டிருந்தன; சொற்போர்களும் விவாதங்களும் கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் மறியற் போராட்டங்களும் தமிழ் நாட்டையே கலக்கி அடித்துக் கொண்டிருந்தன. முடிவில், 1960 –களின் பிற்பகுதியில், அறிஞர் அண்ணாதுரையின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழக ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது; பிராமண ஆதிக்கம் சரியத் தொடங்கிற்று. பிராமணரல்லாத நிலவுடைமையாளர்கள், வணிகர்கள், சைவ வேளாளர்கள், அறிவாளிகள் முதலியோரின் ஆதிக்கம் வலுக்கத் தொடங்கியது. அதே சமயம், காலம் காலமாக அடக்கி ஒடுக்கி அமுக்கி வைக்கப்பட்டிருந்த உடலுழைப்பாளிகள் மத்தியிலும் சிறிது சிறிதாக விழிப்புணர்வு ஏற்படலாயிற்று. அதுகாலவரை அவர்களிடம் குடிகொண்டிருந்த தாழ்வுச் சிக்கலும் அகலுவதற்கேற்ற அறிகுறிகள் தென்படலாயின.

திராவிட இயக்கங்களைச் சேர்ந்த பிரதம தளகர்த்தர்களான பெரியார், அண்ணாதுரை முதலியோரின் தீவிர நடவடிக்கைகளில் சமூக கலாச்சார அம்சங்கள் முக்கியம் பெற்றிருந்தன. தீண்டாமை ஒழிப்பு, பிறப்பினடிப்படையிலான சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், சாதிப் பெயர்களை நீக்குதல், சகலருக்கும் கோயிற் பிரவேச உரிமை, கோயிற் சொத்துக்களைச் சமூக நலத்திற்காகப் பயன்படுத்தல், பெண் அடிமை ஒழிப்பு, பிராமண மேலாதிக்க எதிர்ப்பு முதலியன பற்றித் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டபோது, அதுகாலவரை சமூக, பொருளாதார ரீதியாகப் பிற்படுத்தப்பட்டிருந்த மக்கள் அவற்றாற் கவரப்பட்டுத் திராவிட இயக்கங்களின் தலைவர்களுக்குப் பின்னால் அணி திரண்டனர்; அதேசமயம், உலக அரங்கில் ஏற்பட்டுக் கொண்டிருந்த பெருமாற்றங்களும் கிளர்ச்சிகளும் புரட்சிகளும், இந்தியாவிலே சிறிது சிறிதாகப் பரவத் தொடங்கிய பொதுவுடைமைக் கருத்துகளும், முற்போக்குச் சிந்தனைகளும் தமிழகத்தின் பிற்படுத்தப்பட்ட மக்களது விழிப்புணர்வுக்கும் எழுச்சிக்கும் ஏற்ற உந்து சக்திகளாக அமையலாயின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கூறப்பட்ட நிலைமைகள் – திராவிட இயக்கச் செயற்பாடுகள் முதலியவை – தமிழகத்துடன் மட்டும் நில்லாது இலங்கையிலும் குறிப்பாக, வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் மலையகத்திலும் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தலாயின.

## மனித நேயத்தினர் குமுறல்

பிரித்தானியராட்சிக் காலப் பகுதியிலும், அதன்பின் 1960 – களின் பிற்பகுதி வரையிலும், பிராமணர்கள் பெற்றிருந்த மேலாதிக்கத்தையும் எதேச்சதிகாரத்தையும் சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்க்கைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த உடலுழைப்பாளிகளின் பரிதாபகரமான நிலைமையும் அவர்கள் அடிமைகளினும் கேவலமாக நடத்தப்பட்டதையும் கண்டு, மனித நேயம் பூண்ட சில பிராமணர்களும் பிறரும் பிரித்தானிய அதிகாரிகள் சிலரும் குமுறினர்; கண்டனம் செய்தனர்; அடிமைகளாக நடத்தப்பட்ட கோடிக் கணக்கான மக்களின் இரங்கத்தக்க நிலைமையை எண்ணி அனுதாபப்பட்டனர்; குறிப்புகள் எழுதினர்; அறிக்கைகள் வெளியிட்டனர். அதற்குமேல், அவர்களால் எதுவும் செய்ய முடியாது போயிற்று. இதற்கு மாறாக, பிராமணர்களான பாரதியார், கோ. நடேசய்யர் போன்றோர் ஆற்றிய பணிகள் மனங் கொளத்தக்கவை.

தமிழகத்திலே – தாயகத்திலே – பாவப்பட்ட மக்களின் நிலை இவ்வாறிருக்க, அதே காலப்பகுதியில் இல்ங்கையின் மலையகத் தோட்டங்களிலும் பிஜி, மொரிசியஸ், பர்மா, தென் ஆப்பிரிக்கா, ரீயூனியன் முதலிய – உலகின் ஏனைய பகுதிகளிலும் தொழிலாளர்களாக – அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருந்த, தமிழகத்தினதும் இந்தியாவின் ஏனைய பகுதிகளினதும் பாவப்பட்ட மக்களின் சந்ததியினரது நிலைமையும், மேற்கூறப்பட்டது போன்றே காணப்பட்டது.

தமிழகத்துப் பண்ணைகளில் அடிமைகளாக வேலைசெய்த உடலுழைப்பாளிகளின் நிலை கண்டு மனம் வெதும்பிய பட்டாபி சீத்தாராமையர் என்பவர் 1940 –ம் ஆண்டிலே, "சேற்றிலும் சகதியிலும் உழன்று பயிரிடும் பண்ணையடிமை, அரைவயிற்றுக் கஞ்சியுடனோ முழுப்

www.tamilarangam.net



பட்டினியாகவோ வேலை செய்கின்றான். அவனுக்குப் புயல், மழை, வெயில் எதுவும் ஒய்வு தருவதாக இல்லை. மரணம் ஒன்றே ஒய்வு தருகிறது. நமக்காக நெல் விளைவித்து, அவன் வறுமையில் வாடுகிறான்; நம் பசுவை வளர்த்து நமக்குப் பால் தருகிறான். ஆனால் அவனோ கஞ்சியையும், தண்ணீரையும் தவிர வேறறியான். அவன் நமக்காகக் கிணறு தோண்டுகிறான்; ஆனால் அதில் நீர் ஊறும்போது, அவனை அதிலிருந்து விலக்கி விடுகின்றோம். அவன் பரிதாப நிலை நம் நெஞ்சைத் தொடுவதாக உள்ளது."[27] எனக் கூறியுள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. சிற்சில வேறுபாடுகளைத் தவிர தமிழகத்துப் பண்ணை அடிமைகளின் நிலைமையும் அவர்களது பரம்பரையைச் சேர்ந்த, மலையகத் தோட்டத் தொழிலாளர்களது நிலையும் எத்துணை ஒற்றுமையுடையன என்பதை இங்கு விளக்கிக் கூறத் தேவையில்லை.

தமிழின் தரமான நாவல்களுட் சிலவாகக் கருதப்படும் டி. செல்வராஜின் 'மலரும் சருகும்', சின்னப்ப பாரதியின் 'தாகம்', பொன்னீலனின் 'கரிசல்', இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனல்' முதலிய நாவல்களைப் பற்றி விரிவாக ஆராயப் புகுந்த விமர்சகர் கேசவன், 'தாகம்' என்னும் நாவல் சித்திரிக்கும் பண்ணையார் – பண்ணையடிமை உறவு நிலையை விளக்குமிடத்துப் பின்வருமாறு கூறியுள்ளார்: "......... ஒரு பக்கம் பண்ணையார், அவனுக்குக் கைகட்டிச் சேவகஞ் செய்யும் குண்டர்படை காணப்படுகிறது. மறுபக்கம் காலம் காலமாக அவனது குடும்பத்துக்குக் கட்டுண்ட விவசாயிகளும் அவர்களது தோழர்களும் காணப்படுகின்றனர். .......... 'தாகம்' நாவலில் வரும் குஞ்சுண்டி, காத்தான் போன்றோர் பண்ணையடிமைகளே. இவர்கள் வாழ்க்கையின் அவலம் சொல்லுந்தரமன்று. இவர்கள் தம் குடும்பச் செலவுக்காகப் பண்ணையாரிடம் கடன் வாங்கித் திரும்பிச் செலுத்த முடியாமற் போனதால், அவரிடமே கட்டுண்டு விடுகிறார்கள். பாறைக் கல் வலசு சேனாபதிக்கவுண்டரின் நிலப் பிரபுத்துவ கோபுரத்தைத் தாங்கும் அடித்தளங்களாகிறார்கள். உடைமையில்லாத இவர்களின் உயிருக்கும் மானத்துக்கும் காப்பேயில்லை. அரைஞாண் கயிறு வாங்குவதிலிருந்து, திருமணம் செய்து கொள்வது வரை பண்ணையாரிடமிருந்து அனுமதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்றாக வேண்டும். காத்தான், பண்ணையிடம் அனுமதி பெற்று வள்ளியை மணக்கிறான். பண்ணையிடம் ஆசீர்வாதம் வாங்கவரும் போது, பண்ணையார் வள்ளியைப் பார்த்துக் கூறுகின்றான்;

"டேய், அவளெ சாணியெடுக்க அனுப்பிவெய்"

இது ஒரு சமுதாயக் குழூஉக்குறி. காலங்காலமாக விவசாயக் கூலிகளின் உழைப்பைச் சுரண்டியது மட்டுமின்றி, அவர்களது வீட்டுப் பெண்களின் இளமையை சுரண்டும் நிலப்பிரபுத்துவத்தின் கட்டளைக் குறி. இதற்கு அவன், யாரிடமும் இசைவு பெற்றாக வேண்டியதில்லை. அவனைப் பொறுத்தமட்டில் வள்ளி போன்ற விவசாயக் கூலிகள் போகப் பொருள்களே. பண்ணையடிமைகள் தவறு செய்தாலோ, சாணிப்பால் குடிக்கச் செய்தல், சவுக்கடி கொடுத்தல் போன்ற தண்டனைகள் கிடைக்கின்றன. ................ இவர்கள் முழுவதும், பண்ணையாரின் கருணையிலே வாழ்க்கையை நடத்தியாகவேண்டும். இவர்களைக் கட்டுண்ட விவசாயக்கூலிகள் ( Attached agricultural labourer), தற்செயல் விவசாயக் கூலிகள் (Casual agricultural labourer) என இரண்டாகப் பிரிப்பர். தாகம் நாவலிற் காணப்படுவோர், கட்டுண்ட பண்ணையடிமைகளே. இவர்கள் பண்ணையாரின் குடும்ப சேவகர்களாகவும் கருதப்படுவர். பண்ணையாரிடம் சிறிதளவு கடன் வாங்கி, அதைத் திருப்பிச் செலுத்த முடியாமற் போனதால், குறிப்பிட்ட காலம் உழைக்கிறேன் என ஒப்பந்தம் எழுதி வாங்கப்பட்டவர்கள். இதனையே, வலுக்கட்டாயமான உழைப்பு அல்லது வெட்டி என்று மத்தியகாலக் கல்வெட்டுகள் கூறும். அம்முறையின் இக்கால வடிவங்களே கட்டுண்ட பண்ணையடிமைகள் ஆவார்கள். ............ இந்திய வேளாண்மைத்துறையின் சுமைதாங்கிகளான இவர்கள் நிலைமையில், வேறுபாடோ வளர்ச்சியோ காணப்படவில்லை. ........."[28]

சற்று நீளமாக அமைந்துள்ள இப்பகுதி, நுணித்து நோக்கத்தக்கது. பண்ணையடிமைகள் தனது கட்டளையை மீறினாலோ, தமக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தாலோ அவர்களை அடக்கி ஒடுக்கப் பண்ணையாரிடம் குண்டர் படை இருந்தது. பண்ணையாருக்குக் 'காமப்பசி' ஏற்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போதெல்லாம் பசியாறுவதற்கு விவசாயக் கூலிகளான இளம் பெண்கள் இரையாக்கப்பட்டனர். பண்ணையாரின் மீளாக் கடனாளிகளாக வாழவேண்டிய நிர்ப்பந்தம், நாட்டினது பொருளாதாரத்துறையின் சுமைதாங்கிகளான இவர்களது வாழ்வின் அவலங்கள் முதலியவை ஏறத்தாழ ஒரே அச்சில் வார்த்தது போலவே மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்துவதைக் காணலாம்.

## பண்டைய வழக்கம்

பண்ணைகளில் வேலை செய்யும் இளம் பெண்களைப் பண்ணையார்கள் தமது காமப்பசிக்கு இரையாக்கும் கொடுமை, தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் இடம் பெறுவதை ஆய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.[29] "கௌடன், பரம்பரை நிலப்பிரபு. அவனிடம் பண்ணையடிமைகளாக வேலை செய்த உழவுக் கூலிகளுக்கு மணமானவுடன், முதல் நாளிரவு அவர்களது மணப்பெண்களைக் கௌடனிடம் அனுப்பிவிட வேண்டும். இது நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக இருந்துவரும் பண்டைய வழக்கம். நிலத்தின் சொந்தக்காரன், நிலத்தில் உழைக்கும் பெண்களின் பெண்மைக்கும் சொந்தம் பாராட்டினான். இந்த வழக்கத்தை எதிர்த்தால், எதிர்ப்பவன் உயிர்வாழ முடியாது. ................"[30] என வரும் கூற்றும் நோக்கத்தக்கது. இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும்கூட இத்தகைய கொடூரமான வழமை, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை நிலவி வந்தமையினைச் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக டானியலின் 'அடிமைகள்' என்னும் நாவல் இவ்வகையில் நோக்கத்தக்கது. வடபகுதியில் குட்டி நிலப்பிரபுக்களாகத் திகழ்ந்தவர்களின் காமக்களியாட்டங்களைப் புலப்படுத்தும் பழமொழிகள் சில இன்று வரையிலும், பாமர மக்களிடையே வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.[31]

சமூக பொருளாதார ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட உடலுழைப்பாளிகள், சாதிவெறியர்களாலும் நிலவுடைமையாளர்களாலும் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதற்கும் உரிமைகள் கோருவோருக்கு எத்தகைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொடூரங்கள் இழைக்கப்படுகின்றன என்பதற்கும் கடந்த மூன்று நான்கு தசாப்தங்களாகத் தமிழகத்திலும் இந்தியாவின் பிறமாநிலங்களிலும் ஈழத்திலும் இடம் பெற்று வந்த கொடிய நிகழ்ச்சிகளே தக்க சான்றுகளாகும். தமிழகத்துக் கீழ்வெண்மணியிலும், மீனாட்சி புரத்திலும் சில ஆண்டுகளுக்கு முன்பு இடம் பெற்ற குரூரச் செயல்களும் மதமாற்ற நிகழ்ச்சிகளும் யாராலும் இலகுவில் மறக்க முடியாதவை.[32]

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில், பண்ணையார்களின் கொடுமைகளைத் தாங்கமாட்டாது பண்ணைகளை விட்டு ஓடிய அடிமைகளைத் தேடிப் பிடிப்பதற்குப் பகீரத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. காரணம் : அடிமைகள் இல்லாவிடில் தானிய உற்பத்தியும் கிடையாது; பண்ணையாருக்கான சேவகமும் கிடையாது. அவற்றின் மூலம் பண்ணையாருக்கும் பண்ணையாருடாக ஆட்சியாளருக்கும் நட்டம் ஏற்பட்டுவிடும் என்பதனாலேயாம்.

பிரித்தானியராட்சிக் காலத்தில் முக்கியத்துவம் பெற்ற ஜமீன்தார் முறை, கூலிமுறை, வட்டிக்குக் கடன் கொடுக்கும் முறை முதலியவற்றால், ஏற்கனவே ஒரு சிறு பகுதியினரிடம் குவிந்திருந்த விளைநிலங்கள் மேன்மேலும் அச்சிறு பகுதியினரிடமே குவிவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. அதே சமயம், அன்றைய சூழ்நிலைகள் காரணமாக சிறுசிறு துண்டு நிலங்களையுடைய ஏழை மக்கள் அதனையுமிழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1979 –ம் ஆண்டு இடம் பெற்ற மதிப்பீட்டின்படி, இந்தியக் கிராமங்களில் வாழும் ஐம்பத்தொரு (51) கோடி மக்களில், நான்கு சதவீதத்தினர் அறுபத்து நான்கு (64) சதவீத நிலத்தை உடையவர்களாகவும், 6.5 கோடி மக்கள் நிலமற்றவர்களாகவும் விளங்கினர்.[33] குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்தவரை, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், தஞ்சை மாவட்டத்தின் மன்னார்குடி என்னும் பகுதியில் வேளாளர் குலத்தைச் சேர்ந்த மிராசுதார்கள் சிலர் பெரும் நிலவுடைமையாளர்களாக – ஒவ்வொருவரும் இரண்டாயிரம் ஏக்கர்களுக்கும் மேற்பட்ட நிலப்பகுதியை உடையவர்களாக விளங்கினர் எனவும், சீர்காழியைச் சேர்ந்த பெரும் நிலவுடைமையாளர் ஒருவருக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாற்பதினாயிரம் ஏக்கர் நிலப்பகுதி சொந்தமாக இருந்தது எனவும் இது போன்றே திருச்சி, திருநெல்வேலி முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த பிராமணர், சைவவேளாளர் முதலிய பெருநிலக்கிழார்கள் பெரும் நிலவுடைமையாளர்களாக விளங்கினர் எனவும் கூறப்படுகிறது.[34]

இதுவரை நோக்கியவற்றிலிருந்து, குறிப்பிடத்தக்க பல உண்மைகள் புலப்படும். இன்றைய மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மூதாதையர் தமது தாயகத்திலே – தமிழகத்திலே, நிலவுடைமை அமைப்பின் கீழ் அவ்வமைப்பினைத் தாங்கிநிற்கும் தூண்களாக விளங்கி வந்தபோதும், பல நூற்றாண்டுகளாகச் சமூக பொருளாதார ரீதியாக மேலாதிக்கம் பெற்றிருந்த தமது இனத்தவருள் ஒரு பகுதியினரால் காலம் காலமாகச் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டனர். சமூக பொருளாதார ரீதியாக மேலாதிக்கம் பெற்றிருந்தோர் அத்தகைய தமது கொடுஞ் செயல்களை மூடி மறைக்கச் சமயம், சாத்திரம், தெய்வம் முதலியவற்றைத் தக்கவாறு பயன்படுத்தினர். 'சும்மா இருந்து சுகம் காண' முயன்ற சுகபோகவர்க்கம், தனது சுகபோக வாழ்வுக்குத் தேவையான அளவில் உழைக்கும் வர்க்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை 'விஞ்சவும் விடாது துஞ்சவும் விடாது' – அதாவது வாழவும் விடாது சாகவும் விடாது – கவனித்துக் கொண்டது. பல்லவ, சோழ, விசயநகர பேரரசுகளின் காலம் முதற்கொண்டு 'காந்தியுகம்'[35] வரை நாம் இதனையே காண்கிறோம். இடையில் ஏற்பட்ட பிரித்தானிய ஏகாதிபத்தியமும் நிலவுடைமை ஆதிக்கத்தைப் பொறுத்தவரை, அடிப்படை மாற்றங்கள் சிலவற்றை ஏற்படுத்தினாலும், நீண்டகாலமாக வஞ்சிக்கப்பட்ட உடலுழைப்பாளிகளின் வாழ்க்கை நிலையிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எவையும் ஏற்பட்டதில்லை.[36]

அவர்கள் தமது தாயகத்தில் வாழ்ந்தால் என்ன! இலங்கையின் மலையகத்தில் வாழ்ந்தால் என்ன! அவர்களைப் பொறுத்தவரை, எல்லாம் ஒன்றுதான். புதுமைப்பித்தன் கூறியது போன்று அவர்களுக்கு "வாசவன் பட்டியானால் என்ன! வாட்டர் பாலமானால் என்ன! எல்லாம் ஒன்றுதான்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஓணம் வந்தாலும் உண்ணி பிறந்தாலும் கோரனுக்குக் கஞ்சி தொன்னையிலே" என்ற பழமொழியும் இவ்விடத்தே நினைவு கூரத்தக்கது. அன்றும் இன்றும், தமிழகத்திலும் மலையகத்திலும் பழைய ஒடுக்குமுறைச் சாதனங்களுக்கும் நவீன ஒடுக்குமுறைச் சாதனங்களுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றனவே தவிர அவர்களது இரங்கத்தக்க நிலையில் அதிகம் வேறுபாடுகள் காணப்படவில்லை. அவர்களைப் பொறுத்தவரை, இலங்கை – இந்திய அரசுகள் மேற்கொண்ட 'இருட்டடிப்பு' முறைகளும் மனங்கொளத்தக்கவை.

## ஆயிரக்கணக்கான ஆண்டுகள்......

மலையகத் தோட்டத் தொழிலாளர்களை 'இருபதாம் நூற்றாண்டு அடிமைகள்' எனக் கூறினாலும், உண்மையில் அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் மட்டுமல்ல, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தமிழகத்திலே அடிமைகளாகவே நடத்தப்பட்டு வந்தனர். இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் கடந்தகால வரலாறும், இத்தகையதே என்பது மனங்கொளத்தக்கது. பிரித்தானியராட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கொடும் பஞ்சங்களும் அவர்களது நிலைமைகளை மேலும் மோசமடையச் செய்யவே, பல்வேறு நிர்ப்பந்தங்களால் இலட்சக்கணக்கில் அவர்கள் தமது தாயகத்தை விட்டு வெளியேற வேண்டியேற்பட்டது. அவ்வாறு, தாயகத்தை விட்டு வெளியேறாத இலட்சோபலட்சம் தொழிலாளர்கள், தமிழகத்திலே கடந்த சில தசாப்தங்கள் வரை மிக மோசமான நிலையில் வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வந்துள்ளனர். பண்ணை உடைமையாளர்களும் பிறரும் அவர்களை அடிமைகளாகவே நடாத்தினர். 36A தமிழகத்திலே வெளிவந்துள்ள தரமான சிறுகதைகள் பலவும், பிரதேச நாவல்கள் பலவும் அவர்களது இரங்கத்தக்க நிலைமைகளைத் துல்லியமாகப் புலப்படுத்தியுள்ளன.

மேற்கண்ட உண்மைகளை, இன்றுங்கூட இன்னொருவகையில் நம்பகமாக அறிய முடிகிறது. பிரித்தானியராட்சியின் போது தென்னிந்தியாவிலிருந்து மலையகத்திற் குடியேறிய தொழிலாளர்களின் சந்ததியினர் தோட்டங்களில் வெள்ளைத் துரைமார்களாலும் பிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிகாரிகளாலும் சொல்லொணாத் துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் ஆளாக்கப்பட்ட பின்னர், இலங்கை – இந்திய ஆட்சியாளர்களால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் காரணமாகப் பல இலட்சக் கணக்கான தொழிலாளர்கள், ஏறத்தாழ 1960–களிலிருந்து, தாயகம் திரும்ப நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவ்வாறு அவர்கள் தாயகம் திரும்பும்போது அனுபவித்த வேதனைகள், துயரங்கள், ஏற்பட்ட சோதனைகள், பிரிவுத் துயரங்கள், போக்குவரத்து வசதியீனங்கள் முதலியன ஏறத்தாழ 160 (நூற்றியறுபது) ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களின் மூதாதையர், தென்னிந்தியாவிலிருந்து மலையகத்திற்குப் பயணம் மேற்கொண்டபோது அனுபவித்த வேதனைகள், துயரங்கள், ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகள் முதலியவற்றிலிருந்து அதிகம் வேறுபடவில்லை என்பதை அண்மைக்காலச் சான்றுகள் 37 பல நிரூபிக்கின்றன.

இதே போன்று, தாயகம் திரும்பிய தொழிலாளர்களுக்கு அங்கு எத்தகைய வரவேற்புக் காணப்பட்டது! அங்கு அவர்களின் நிலை எத்தகையது! என்பவற்றை நோக்கின், அவர்களது மூதாதையர் 160 ஆண்டுகளுக்கு முன் அங்கு எத்தகைய நிலையிற் காணப்பட்டனரோ எவ்வாறு நடத்தப்பட்டனரோ அவற்றுக்கு நிகராக அல்லது அவற்றிலும் கேவலமாக அந்நியர்களாகவும் அநாதைகளாகவும் அடிமைகளாகவும் தீண்டத் தகாதவர்களாகவும் நடாத்தப்படுவதுடன், இலங்கைப் பெருந்தோட்டங்களில் இனக்கலவரம் என்ற பெயரில் இனவாதக் குண்டர்களால் அடிக்கடி நடாத்தப்படும் மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கும், கொலை கொள்ளைச் சம்பவங்களுக்கும் அடிக்கடி தொழிலாளர்கள் எவ்வாறு ஆளானார்களோ – ஆளாகின்றார்களோ, அதே போன்று அல்லது அதனிலும் மோசமாகத் தமிழகத்திலே – தாயகத்திலே, தாயகம் திரும்பியோர் தமிழகத்துக் குண்டர்களாலேயே கொடூரமான தாக்குதல்களுக்கும் கொலை, கொள்ளைச் சம்பவங்களுக்கும் அடிக்கடி ஆளாவதையும் பண்ணைகளதும் தமிழகத்தின் மலையகப் பெருந்தோட்டங்களதும் உடைமையாளர்களே தமது கட்டளைகளையும் அடக்குமுறைகளையும் அவர்கள் மீறும்போது குண்டர்களை ஏவி இவற்றைச் செய்விப்பதையும், தமிழக ஆட்சியாளரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதுகாவலர்களும் இவற்றைக் கண்டும் பாராமுகமாக இருப்பதையும் அங்கு அடிக்கடி இடம் பெறும் சம்பவங்கள் நிரூபிக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சில சம்பங்கள் வருமாறு :

குன்றின் குரல் (ஜூலை – ஆக்ஸ்ட், 1990) சஞ்சிகையில், 'அக்கரை அட்டுழியங்கள்', 'தாயகம் திரும்பிய மக்களின் குடிசைகளுக்கு தீவைப்பு', அக்கரைக் கிராமத்தில் பாதிப்புற்றோர் உளம் நொந்து பேசுகிறார்கள்" "எங்கு சென்றாலும் இதே கதிதானா?" (குன்றின் குரல், தை, 1986) "கொடைக்கானல் கொத்தடிமைகளின் உரிமைப் போராட்டம்" (குன்றின் குரல், ஆனி, 1986, மலர் – 6, இதழ் – 6) "தாயகம் திரும்பியோருக்கு ஒரு தர்மசங்கடம்" முதலிய தலைப்புகளில் விரிவான முறையிற் காட்டப்பட்டுள்ள விடயங்கள் உள்ளத்தை உலுக்குபவை. "உச்சிக்கவுடர் (தோட்ட உடைமையாளர்) சொல்லும் பச்சைப் பொய்யெல்லாம் உண்மை என்று ஒத்துக் கொள்ள அதிகாரிகள் தயங்குவதில்லை. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்' என்று சொல்லிக் கொண்டு ஏழைகளைக் கதறியழச் செய்த கபோதிகளைக் கண்டிக்காத, கைது செய்யாத நிர்வாகத்தின் இலட்சணத்தை எப்படித்தான் அளவிட முடியும்? இன்றும் பணமும் படாடோபமும்தான் ஆட்சிப் பீடங்களை ஆட்டிக் கொண்டிருக்கின்றன [38] எனவும் "............21–ம் திகதி பகல் 3.15 மணியளவில் சில லொரிகளிலும் ஜீப் வண்டிகளிலும் குண்டர்கள் 400 – 500 பேருக்கு மேல் உச்சிக்கவுடர், பௌ்ளிராஜ் ஆகியோர் தலைமையில் நாங்கள் குடியிருந்த இடத்திற்கு வந்து துப்பாக்கியால் சுட்டு எங்களை மிரட்டி, குடிசைகளுக்குத் தீ வைத்து, அடித்து நொறுக்கி எங்கள் எல்லோரையும் மிருகத்தனமாகத் தாக்கிக் காயப்படுத்தி விரட்டியடித்தனர்.......... இந்தக் காரணத்தினால் எனக்குத் தலையில் 18 தையலும், நெற்றியில் ஒரு தையலும், வலது காலில் 2 தையலும், இடது காலில் ஒரு தையலுமாக மொத்தம் 22 தையல்கள் போடப்பட்டன........ குண்டர்கள் தாக்கியபோது, எனக்கு ஏற்பட்ட காயத்துடன் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நான் ஓடிச் சென்று காட்டில் பதுங்கிக் கொண்டேன். .......... " [39] என வரும் பகுதிகள் நோக்கத்தக்கவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏறத்தாழ 1820 –களிலிருந்து, மலையகத் தோட்டங்களிற் குடியேறத் தொடங்கிய தொழிலாளர்கள் கோப்பிப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் பட்ட ஆரம்ப காலப்பகுதியில் மலையகத்தில் நிரந்தரமாகக் குடியிருக்கும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. அடிக்கடி, இந்தியா சென்று வந்தனர். குறிப்பிட்டளவு செல்வம் திரட்டியதும், தாயகம் திரும்பிச் சிறு துண்டு நிலத்துக்காவது சொந்தக்காரராகிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தலாம் என்ற மனப்பாங்குடையோராகவே செயற்பட்டனர். இலங்கையில் மட்டுமின்றி பர்மா, மலாயா முதலிய நாடுகளில் வாழ்ந்த தொழிலாளரும் இதே எண்ணத்தைக் கொண்டிருந்தனர். ஒரு சிறு தொகையினரின் எண்ணம் இவ்வகையில் ஈடேறியிருக்கலாம். ஆயின், பெருந்தொகையான தொழிலாளரின் எண்ணம் 'கானல் நீராகவே' மாறியது.[40] பல்வேறு காரணங்களால், ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே இலங்கையில் இவர்கள் நிரந்தரமாகக் குடியேறத் தொடங்கினர்.

## முழுமை அர்ப்பணம்

அறியாமை இருளிலும் வறுமையிலும் மூழ்கித் துயரங்களின் மொத்த உருவமாக விளங்கிய தொழிலாளர்களின் விடிவுக்காக பிரேஸ்கடில், சேர். பொன். அருணாசலம் போன்ற ஒரு சிலர் குரல் எழுப்பியபோதும் 'தேசபக்தன்' கோ. நடேசய்யர் அவர்களே விதந்து கூறத்தக்க வகையில், தம்மை முழுமையாக அர்ப்பணித்துத் தொழிலாளர்களின் விடிவுக்கும் எழுச்சிக்குமாக 1920 களிலிருந்து, 1940 களின் பிற்பகுதிவரை அயராதுழைத்தார். சிலகாலம் சட்டசபை அங்கத்தவராக விளங்கியபோது, தொழிலாளர் நலனுக்காகவே தமது பதவியைப் பயன்படுத்தினார். இந்திய தேசிய இயக்கத்தினால் கவரப்பட்டிருந்த அவர், சிறந்த பத்திரிகை யாளனாகவும் பேச்சாளனாகவும் செயல் வீரனாகவும் விளங்கினார்; பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பரம வைரியாகவும் தொழிலாளர்களின் ஆப்த நண்பனாகவும் செயற்பட்டார். 1926 –ம் ஆண்டிலிருந்து 1928 –ம் ஆண்டுவரை ஏ.ஈ. குணசிங்காவுடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட அவர், தோட்டத் தொழிலாளர் மீது அக்கறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காட்டாதிருந்த குணசிங்காவின் செயல்களால் அவருடன் மனஸ்தாபப்பட்டு அவரை விட்டுப் பிரிந்து, தோட்டத் தொழிலாளரின் நன்மையின் பொருட்டு 1931 ம் ஆண்டு 'அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம்' என்னும் சங்கத்தை அமைத்துச் செயற்பட்டார்.

அவர்மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளினாலும் செயற்பாடுகளினாலும் தோட்டத் துரைமார்களதும் கங்காணிமார்களதும் பெரும்பகைமையைச் சம்பாதித்துக் கொண்ட போதிலும், இறுதிவரை தமது முயற்சிகளில் தளராது ஈடுபட்டார்.[41] உண்மையில் நடேசய்யர் காலப்பகுதியிலிருந்தே, மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஓரளவு விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியது. நடேசய்யர் ஆரம்பித்த தொழிற்சங்க சம்மேளனத்தைத் தொடர்ந்து, பல தொழிற் சங்கங்கள் உருவாகின. தொழிற் சங்கங்கள் மூலம் தொழிலாளர்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காகப் போராட்டங்களிலும் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபடத் தொடங்கியதும் இலங்கையின் ஆட்சியாளர்களும் தோட்டத்துரைமார்களும் பேரினவாதிகளும் விழித்துக் கொண்டதுடன், தோட்டத் தொழிலாளரை அரசியல் அநாதைகளாக்கும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபடலாயினர்.

அரசியல் ரீதியாக மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஓரளவு பெற்றிருந்த உரிமைகளும் சலுகைகளும், 1931 ம் ஆண்டு டொனமூர்ச் சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து பறிபோகலாயின. 1935 ம் ஆண்டில் இயற்றப்பட்ட காணி அபிவிருத்திச்சட்டம், 1948 –ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம், 1949–ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் திருத்தச் சட்டம் முதலியவற்றால் தோட்டத் தொழிலாளர்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டனர்;[42] மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்தபோது தோட்டத் தொழிலாளரின் எண்ணிக்கை பத்து இலட்சத்துக்கும் அதிகமாகக் காணப்பட்டது. அரசியல் அநாதைகளாக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவிற்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருப்பி அனுப்பும் முயற்சியில், சுதந்திர இலங்கையின் ஆட்சியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். 1970 களின் முற்பகுதிவரை இலங்கை – இந்திய அரசுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட பல ஒப்பந்தங்களினால் பல இலட்சம் தொழிலாளர்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர்.[43]

1970 களின் முற்பகுதியில் பதவியில் இருந்த ஆட்சியாளர்கள் நிறைவேற்றிய நிலச்சீர்த்திருத்தச் சட்டங்களினாலும், பெருந்தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டமையினாலும் தோட்டத் தொழிலாளர்களின் இன்னல்கள் மேன்மேலும் அதிகரிக்கலாயின. பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் தோட்டங்களிலிருந்து விரட்டப்பட்டுத் தெரு ஓரங்களில் அலையலாயினர்; நூற்றுக்கணக்கானோர் பட்டினிச் சாவை எய்தினர். உண்மையில், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரே தொழிலாளர் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவை போதாவென, 1956 –ம் ஆண்டு தொடக்கம் 1983 –ம் ஆண்டுவரை (அதன் பின்னரும், பரந்த அளவில் இல்லாவிடினும் ஆங்காங்கே அடிக்கடி தாக்குதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை மனங்கொளத்தக்கது) அடிக்கடி 'இனக்கலவரம்' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் காரணமாகப் பெருந்தொகையான உயிரிழப்புகளும் பொருட் சேதங்களும் ஏற்பட்டதுடன், இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் அகதிகளாக்கப் பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கும் இந்தியாவிற்கும் பெயரலாயினர்.

மேற்கண்ட நெருக்கடியான நிலைமைகளுக்கு மத்தியிலும், 1950–களின் பிற்பகுதியிலிருந்து, தோட்டத் தொழிலாளரின் உரிமைப் போராட்டங்கள் அதிகரிக்கத் தொடங்கியதுடன் முன்னர் என்றும் இல்லாத அளவிற்கு அவர்களிடையே விழிப்புணர்வும் எழுச்சியும் ஏற்பட்டு வருவதை அவதானிக்கலாம். இன்று, அவர்களது பிரஜா உரிமைப் பிரச்சினையும் ஓரளவிற்குத் தீர்க்கப்பட்டுள்ளது எனலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மலையகத்தில் மட்டுமன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் உலக அரங்கிலும் – குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் – காலம் காலமாகச் சமூக, பொருளாதார, அரசியல் ரிதியாக வஞ்சிக்கப்பட்ட மக்கள் இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, பல்வேறு காரணங்களால் விழிப்புற்று எழுச்சியடைந்து வருவதை அவதானிக்கலாம். இத்தகைய ஒரு போக்கிற்குத் தோட்டத் தொழிலாளர்களும் விதிவிலக்காக இருக்க முடியாது.

1917 ம் ஆண்டு ர்ஷ்யாவில் ஏற்பட்ட மாபெரும் அக்டோபர் புரட்சி – இன்றைய அதன் வீழ்ச்சி தற்காலிகமானதே என்பது மனங்கொளத்தக்கது – அதனைத் தொடர்ந்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் பொதுவுடைமைச் சிந்தனைகளும் முற்போக்குக் கருத்துகளும் வேகமாகப் பரவத்தொடங்கியமை, இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து உலக அரங்கில் மிக வேகமாக ஏற்படத் தொடங்கிய மாற்றங்கள், உலகத் தொழிலாளிவர்க்கம் விழிப்புற்று எழுச்சியுறத் தொடங்கியமை முதலியவை உலகின் ஏனைய நாடுகளைப் பாதித்தது போலவே இந்தியாவையும் அதன் ஒருகூறான தமிழகத்தையும் இலங்கையையும் வெகுவாகப் பாதிக்கலாயின.

## விழிப்பும் எழுச்சியும்

1940 களிலிருந்து தமிழகத்தில் உக்கிரம் பெறத் தொடங்கிய பிராமணிய எதிர்ப்பு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்பாடுகள், அறிஞர் அண்ணாதுரையின் உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகள், இந்திய பொதுவுடைமைக் கட்சியின் செயற்பாடுகள் முதலியன பிராமண ஆதிக்கம் வீழ்ச்சியுற வழிவகுத்த அதேசமயம், தமிழகத்தில் காலம் காலமாகச் சமூக பொருளாதார ரீதியாகப் பின்தள்ளப்பட்டிருந்த மக்களை விழிப்புற்று எழுச்சியுறவும் செய்தன. மேற்கண்ட நிலைமைகளும், இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து அரசியல், சமூக பொருளாதாரத் துறைகளில் ஏற்படத் தொடங்கிய மாற்றங்களும் இலவசக் கல்வி விருத்தியும் பல்கலைக்கழக மட்டம் வரையிலான தாய் மொழிக்கல்வி வளர்ச்சியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிறவும், இலங்கையிலும் காலம் காலமாகப் பின்தள்ளப்பட்டிருந்த மக்களதும் தொழிலாளர், விவசாயிகள் முதலியோரினதும் விழிப்புணர்வுக்கும் எழுச்சிக்கும் வழிவகுத்தன.

தமிழர் சமூகத்தைப் பொறுத்தவரை, தமிழகத்திலும் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் சமூக, பொருளாதார ரீதியாகப் பின்தள்ளப்பட்டிருந்த தாழ்த்தப்பட்டவர்களும் பிறரும் தமது அடிப்படை உரிமைகளைப் பெறவும் முன்னேற்றம் காணவும் வேண்டிக் கொடூரமான அடக்கு முறைகளுக்கு அடிபணியாது, கிளர்ச்சிகளிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டு எழுச்சியுறலாயினர். இதேபோன்று, பேரினவாதத்திற்கெதிரான சிறுபான்மையினரின் போராட்டமும் உக்கிரம் பெறத் தொடங்கியமை மனங்கொளத்தக்கது.

மேற்கண்ட நிலைமைகள் தோட்டத் தொழிலாளர் மத்தியிலும் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்தலாயின. இலங்கை, இந்தியா ஆகியன உட்பட உலகின் பல நாடுகளிலும் காலம் காலமாக அடக்கப்பட்டிருந்த மக்களின் 'எழுச்சிக்காற்று' தோட்டத்து அதிகாரிகளினதும் ஆட்சியாளர்களினதும் வலுவான தடைகளையும் மீறித் தோட்டங்களுட் புகுந்து தொழிலாளர்களுக்கு உற்சாகத்தையும் மன உறுதியையும் அளிக்கலாயிற்று. 1940 களிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கும் இடதுசாரிச் சிந்தனைகளும் தோட்டப்புற மக்களிடையே எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தின என்பதை இங்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. பெருந்தோட்டங்களில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள், தோட்டத் தொழிலாளரின் நலனினும் முன்னேற்றத்திலும் ஆர்வம் கொண்டுள்ள பல்வேறு அமைப்புகள் – கலை – இலக்கிய மன்றங்கள் சஞ்சிகைகள் முதலியவற்றின் செயற்பாடுகள், நடேசய்யர் முதல் கலை – இலக்கிய கர்த்தாக்கள், கல்விமான்கள் முதலியோரது பங்களிப்புகள் ஆகியனவும் தோட்டத் தொழிலாளரது விழிப்புணர்வுக்கும் எழுச்சிக்கும் உறுதுணையாக அமைகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடிக்கடி இடம்பெறும் இனரீதியான வன்செயல்களையும் கொடூரமான அடக்கு முறைகளையும் மீறித் தோட்டத் தொழிலாளர்கள், குறிப்பாக இளந்தலைமுறையினர் முன்றேற்றப் படிகளில் கால் வைக்கத் தொடங்கியுள்ளனர். ஆண்டாண்டு காலமாக இருட்டினில் வாழ்ந்த அவர்கள் மத்தியில் கல்வி அறிவின் ஒளிக்கீறுகள் தென்படத் தொடங்கியுள்ளன. 'தோட்டத் தொழிலாளராவது! படிப்பாவது! உத்தியோகமாவது!' என்ற நிலை மெல்ல மெல்ல மாறத் தொடங்கியுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலேயே பிறந்து வளர்ந்த பலர், இன்று கல்வித்றையிலும் பிற துறைகளிலும் முன்னேறத் தொடங்கியுள்ளனர். அவர்களிடம் குடிகொண்டிருந்த தாழ்வுச் சிக்கல், அகன்று வருகின்றது.

இதனாலெல்லாம் தொழிலாளர் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன என்றோ தீர்ந்துவிடும் என்றோ கொள்ள முடியாது. ஆயினும், தொழிலாளர்களின் எழுச்சிக்கான அடித்தளமாகவும் உந்து சக்தியாகவும் இவை அமையும் என்பதில் ஐயமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சான்றாதாரம்

1. இது தொடர்பாக உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கப் பொதுச் செயலாளராகப் பல ஆண்டுகள் கடமையாற்றிவரும் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்கள் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்த் தொழிலாளர்கள் குடியேற்றப்பட்ட நாடுகள் பலவற்றுக்கும் தீவுகள் பலவற்றுக்கும் நேரிற் சென்று அவர்களது கடந்த கால நிலை, இன்றைய நிலை முதலியன பற்றி உசாவி அறிந்து, அவற்றுள் முக்கியமானவற்றைச் சிறுசிறு நூல்களாகவும் கட்டுரைகளாகவும் எழுதி வெளியிட்டுள்ளார். அத்தோடு அமையாது, அந்நாடுகளிலும் தீவுகளிலும் வெளிவந்த – வெளிவருகின்ற சஞ்சிகைகள், ஆண்டுமலர்கள், கையெழுத்துப் பிரதிகள், அந்நாடுகளின் இன்றைய மொழி, பண்பாட்டு நிலைமைகளைப் பிரதிபலிக்கும் புகைப்படப் பிரதிகள், ஒலிப்பதிவு நாடாக்கள் முதலிய பல பயன்மிக்க தகவல்களை அரும்பாடுபட்டுச் சேகரித்து வைத்திருந்தார். அவை, இப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். பத்தொன்பதாம் நூற்றாண்டில் 'கூலிகள்' என்ற பெயரில் கடல்கடந்த தமிழ்த் தொழிலாளர்களின் அன்றைய நிலை, இன்றைய நிலை முதலியன பற்றி அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கும், ஆய்வு செய்ய முயல்வோருக்கும் அவர் சேகரித்துள்ள தகவல்கள் அதிகம் உதவும் என்பதில் ஐயமில்லை. அவரது அரும்பணிகள் பாராட்டப்பட வேண்டியவை. இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றுட் சில வருமாறு:

**குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் நூல்கள்:**

| | |
|---|---|
| **அலைகடல்களுக்கு அப்பால் தமிழர் (1973)** | **(தொடர்வெளியீடு–1)** |
| **உலகத்தமிழர்களின் ஐக்கியத்தை நோக்கி (1974)** | **(தொடர்வெளியீடு–2)** |
| **ரீயூனியன் தீவில் எங்கள் தமிழர் (1979)** | **(தொடர்வெளியீடு–3)** |
| **மொறீசியஸ் தீவில் எங்கள் தமிழர் (1980)** | **(தொடர்வெளியீடு–4)** |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டுரை:

"உலகத் தமிழர் ஒருமைப்பாடு – சில நற்கூறுகளும் அணுகுமுறைகளும்" உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஐந்தாவது (மதுரை) மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை, 1981.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உரிமைக்குரலாகத் திரு. இரா. கனகரத்தினம் அவர்களாற் சில ஆண்டுகள் வெளியிடப்பட்ட 'உலகத்தமிழர் குரல்' என்னும் பத்திரிகை இதழ்களிலும் மேற்கண்ட விடயம் தொடர்பாகப் பயன்மிக்க செய்திகளும் மொறீசியஸ், றீயூனியன், பர்மா, தென்னாபிரிக்கா, பீஜி, முதலிய நாடுகளைச் சேர்ந்தோர் எழுதிய கட்டுரைகளும் வெளிவந்ததுள்ளமை குறிப்பிடத்தக்கது. திரு. இரா.கனகரத்தினம் தம்பதிகளின் ஒப்பற்ற பணிகளைப் பாராட்டி, 1970 களில் 'சுதந்திரன்', 'ஈழநாடு', 'தமிழ்நேசன்' முதலிய பத்திரிகைகளிற் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. கங்குலி, கொண்டாபி, ரிங்கர்ஹக், அன்ட்றூஸ், சக்கரவர்த்தி, ராஜ்குமார் முதலியோர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூல்களும், இவ்வகையில் பயன்மிக்கவை.

2. இவைபற்றிய விளக்கத்துக்குப் பின்வரும் நூல்களைப் பார்க்கவும்:-

**கனகரத்தினம், இரா. குரும்பசிட்டி**

அலைகடல்களுக்கு அப்பால் தமிழர் – 1973

உலகத் தமிழர்களின் ஐக்கியத்தை நோக்கி – 1974

றீயூனியன் தீவில் எங்கள் தமிழர் – 1979

மொறீசியஸ் தீவில் எங்கள் தமிழர் – 1980

3. இதுபற்றித் தமது கட்டுரை ஒன்றில் திரு. சாந்திகுமார் தகுந்த விளக்கம் கொடுத்துள்ளார். "மலையகத்தின் வரலாறும் சமூக உருவாக்கமும்" தீர்த்தக்கரை, அலை. 3,4 – 1981.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



4. முதலாவது அடிக்குறிப்பிற் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் இவ்வகையில் நோக்கத்தக்கவை. அத்துடன் வண. பிதா. தனிநாயக அடிகள், தென்னிந்திய வரலாற்றறிஞர் நீலகண்ட சாஸ்திரி, வாஸ், குஷ்வான் சிங், இராம நாராயணன், இராமதாஸ், முதலியோர் இவ்விடயம் தொடர்பாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுள்ள நூல்களும் கட்டுரைகளும் கவனத்திற் கொள்ளத்தக்கவை.

5. மலையகத் தொழிலாளர் வரலாறு, அவர்களது அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள், வாழ்வியல் அம்சங்கள் முதலியன பற்றிப் பல தசாப்தங்களுக்கு முன்பிருந்தே பல்கலைக்கழக மட்டத்தில் பட்டப் பின்படிப்புக்கான ஆய்வு முயற்சிகளாக மேற்கொள்ளப்பட்டன. இலங்கை, இந்தியா முதலிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழக ஆய்வாளர்களும், ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டுள்ளனர். பல்கலைக் கழகங்களைச் சாராத தனிப்பட்டவர்களும் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளனர். ஆங்கிலத்திலேயே அதிகமான நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. கடந்த சில தசாப்தங்களிலேயே தமிழிற் கணிசமான அளவு கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனினும், இவ்ஆக்கங்களுள் கணிசமானவை தொழிலாளர்களின் உண்மையான வரலாற்றினையும், சோகம் மிகுந்த அவர்களது வாழ்க்கை நிலையையும் செம்மையாகப் புலப்படுத்துவதற்குப் பதில், அவர்கள் மீதான அறியாத்தனம்மிக்க குரோத உணர்வையும் வெறுப்பினையுமே வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஒருசில நூல்களும் கட்டுரைகளுமே உண்மை நிலையைப் புலப்படுத்த முயன்றுள்ளன. மலையகத் தொழிலாளர்களின் விடிவுக்காகத் தம்மை அர்ப்பணித்த சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் இது பற்றிக் கூறியுள்ள சில வாசகங்கள் வருமாறு: "...... தமிழ் நாட்டிலிருந்து நம் மக்களைக் கூலிகளாகக் கொண்டுவந்து, இப்பொழுது பலகோணங்களிலிருந்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக ஒருசில ஆராய்ச்சி நூல்களும் வெளிவந்திருக்கின்றன. இவைகளெல்லாம் அந்தக்காலத்து உண்மைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரித்திரத்தையோ அல்லது அம்மக்களின் அனுபவங்களையோ ஈடுசெய்யக்கூடிய முறையில் எழுதப்படவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். எனினும், தொன்றுதொட்டு வழக்கம்போல் தங்கள் அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் அவர்கள் பாடிய பாடல்களில் நமக்குத் தந்திருக்கிறார்கள். அந்தப் பாடல்கள் அவர்களது சரித்திரத்தை மண்மணத்தோடும் உயிர்த்துடிப்போடும் தருகின்றன. ..........." (நாடற்றவர் கதை, 1987, பக் 23.)

குறிப்பிடத்தகுந்த சில நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் வருமாறு:


Dharmapriya Wesumperuma,

Indian Immigrant Plantation Workers in Sri Lanka : A Historical Perspective : 1880 - 1910, Colombo.

Hariprasad Chattopadhyaya,

Indians in Sri Lanka : A Historical Study, Calcutta, 1979.

Gangulee, N,

Indians in the Empire Overseas, A Survey, London, 1947.

Gupta, Babulal,

Political and Civic Status of Indians in Ceylon; Agra - India, 1963.

Kodikara, S.U,

Indo-Ceylon Relations Since Independence, Colombo 1965.

Kondapi, C,

Indians Overseas : 1838 - 1949, London, Calcutta, Bombay, Madras, 1951.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Pandian, S,

The Cooly Life in Ceylon. Palam Cottah, 1917.

Rao, P.R. Ramachandra,

India and Ceylon : A Study. Bombay, Madras, 1954.

De Silva, K.M.

"Indian Immigration to Ceylon : The First Phase, C. 1840 - 1855" The Ceylon Journal of Historical and Social Studies, Vol.4, No.2, 1961.

Naguleswaran, P.,

"A History of the Working Class Movement in Ceylon. II, The Problem of Indian Immigrant Labour in the Nineteenth Century" The Ceylon Historical Journal, Vol. I, No.3, 1952.

Visaka Kumari, Jayawardana,

The Rise of the Labour Movement in Ceylon. Durham - North Carolina, 1972.

Rathakrishnan, N.,

"The Stateless in Ceylon", The Indian Year Book of International Affairs, Madras, 1963.

Jayawardana, L.R.,

The Supply of Sinhalese Labour to Ceylon Plantations 1830 - 1930. A Study of Imperial Policy in a Peasant Society : (Ph.D. Economics) Cambridge, 1963.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Rajaratnam. S.,

History of Plantation Agriculture of Ceylon, 1886 - 1931, with Special Reference to Tea and Rubber. (M.Sc. Economics), London, 1961.

சந்திரசேகரன், சோ.,

இலங்கை இந்தியர் வரலாறு; மதுரை, 1989.

வேலுப்பிள்ளை, ஸி.வி.,

நாடற்றவர்கதை, சென்னை, 1987.

சாரல்நாடன்,

மலையகத் தமிழர், சென்னை, கொழும்பு, 1990.

மலையக வாய்மொழி இலக்கியம், சவுத் ஏசியன் புக்ஸ், 1993.

சிவராஜா, அ.,

மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் இலக்கியங்களும், கண்டி, 1992.

வேல்முருகு, ந.,

இலங்கைப் பெருந்தோட்டங்களில் வாழும் இந்திய வம்சா வழியினரின் சமூகப்புவியியல்.
(கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரை), 1990.

மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும், யாழ்ப்பாணம், 1993.

மாத்தளை வடிவேலன்,

மலையக பாரம்பரியக் கலைகள், கொழும்பு, 1992.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நித்தியானந்தன், வி.,

இலங்கை அரசியல் பொருளாதார அபிவிருத்தி, 1948–1956. வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள், 1989.

6. இதுவரை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்துள்ள நூல்களிலும் கட்டுரைகளிலும் இம்மூவகையான நோக்கினையும் காண முடிகின்றது.

7. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட கொடிய பஞ்சங்களே தொழிலாளர்கள் தாயகத்தைவிட்டு வெளியேறுவதற்குக் காரணம் எனப் பலரும் வாய்ப்பாடாகக் கூறிவருவதை அவதானிக்கலாம்.

8. தாயகம் திரும்பியோரது இன்னல்களையும் அவலங்களையும், அவர்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமங்களையும் சுட்டிக் காட்டுவனவாகப் பின்வரும் அறிக்கைகளும் கட்டுரைகளும் ஒருசில நாவல்களும் காணப்படுகின்றன.

'இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியர்கள்' தோட்டப் பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகம், கண்டி, 1976.

'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' : இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த மக்கள் மத்தியில் ஓர் ஆய்வு, மதுரை, 1982.

'வழிகாட்டி : இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு முக்கிய தகவல்கள், எச்சரிக்கைகள்', தாயகம் திரும்புவோர் ஐக்கிய முன்னணி சம்மேளனம், மதுரை, 1975.

'இலங்கையில் நாடற்றவர்; வீடற்றவர் பிரச்சனை: அனைத்துலக மக்களின் கவனத்திற்கு." தொழிலாளர் தேசிய சங்கம், கொழும்பு, ராஜம் கிருஷ்ணன்: மாணிக்க கங்கை (நாவல்), குன்றின் குரல், ஜூலை – ஆகஸ்ட், 1990.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



9. இந்தியச் சமூக வரலாறு, தமிழகச் சமூக வரலாறு ஆகியன தொடர்பாகக் கடந்த ஒரு சில தசாப்தங்களிற் குறிப்பிடத்தகுந்த வரலாற்று நூல்கள் சில வெளிவந்துள்ளன. கோசாம்பி, கே.கே. பிள்ளை, ந. சுப்பிரமணியன் முதலியோரது நூல்கள் இவ்வகையிலே விதந்து கூறத்தக்கவை. தமிழகத்திலே காலங்காலமாக இடம்பெற்றுவந்த கொடூரமான 'அடிமை முறை' பற்றித் தகுந்த வரலாற்று ஆதாரங்களுடன், சிவசுப்பிரமணியன் எழுதியுள்ள நூலும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

சிவசுப்பிரமணியன், ஆ.,

அடிமை முறையும் தமிழகமும், சென்னை, 1984.

10. தண்டாயுதம். இரா.,

தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், சென்னை, 1972. பக். 77

11. அருணாசலம், க.,

'புதுமைப்பித்தன் கண்ட துன்பக்கேணி', 'இளங்கதிர்' பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம், 1981.

12. இன்றைய மலையகத் தோட்டத் தொழிலாளர், தமிழகத்துச் சேரிப் புறங்களில் வாழ்க்கைப் போராட்டம் நடத்தும் 'பாவப்பட்ட' மக்கள் ஆகியோரது இருப்பிடங்களையும் அவலங்களையும் பண்டைய, இடைக்கால இலக்கியங்கள் காட்டும் அடிநிலை மக்களது நிலைமைகளையும் ஆதாரங்களுடன், விரிவாக ஒப்புநோக்கி ஆராய்ந்தால், மறைக்கப்பட்டிருக்கும் பல உண்மைகள் அம்பலமாகும்.

13. இதுபற்றி விரிவாக அறிவதற்குப் பின்வரும் நூலைப் பார்க்கவும்.

நம்பூதிரிபாட், இ.எம்.எஸ்.,

இந்திய வரலாறு : ஒரு மார்க்சிய கண்ணோட்டம், (தமிழில் பி.ஆர். பரமேஸ்வரன்), 1978.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



14. இது பற்றி இந்நூலாசிரியர் பிறிதோரிடத்தில் விரிவாக நோக்கியுள்ளார். அருணாசலம், க.,

பாரதியார் சிந்தனைகள், 1984, பக். 126–215, 381–393.

15. நம்பூதிரிபாட், இ.எம்.எஸ்.,

இந்திய வரலாறு; ஒரு மார்க்சியக் கண்ணோட்டம், 1978, பக்.75.

16. இது பற்றிப் பல ஆதாரங்கள் உளவேனும், பின்வரும் ஆய்வுக் கட்டுரை இவ்வகையில் விதந்து கூறத்தக்கது:

ராசகுமார், மே.து.,

"சோழர் காலத்தில் வரி எதிர்ப்பு இயக்கம்" ஆராய்ச்சி, ஒக்டோபர், 1973, பக். 67–77.

17. மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நீண்ட காலமாகக் கல்வி வசதி மறுக்கப்பட்டமையும், பொருளாதார ரீதியாக என்றுமே தலையெடுக்காவண்ணம் தோட்ட நிர்வாகிகள் கையாண்டு வந்த தந்திரோபாயங்களும் மனங்கொளத்தக்கவை.

18. சுப்பிரமணியன், தி.நா.,

'கல்வெட்டுகளிற் கண்ட நாடு, ஊர் ஆட்சிமுறை', கையேடு, இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, சென்னை, 1968.

19. Kumar, Dharan,

Land and Caste in South India, Cambridge, 1965.

இந்தியச் சமுதாய வரலாறு. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு.

20. பாரதியார் கட்டுரைகள், சமூகம், பக். 124–125.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



21. இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து உக்கிரமடையத் தொடங்கிய சாதீயத்திற்கெதிரான போராட்டங்கள், தாழ்த்தப்பட்ட மக்களது நிலைமைகள் முதலியவற்றை விரிவாக நோக்குவதாகப் பின்வரும் நூல் அமைந்துள்ளது.

வெகுஜனன் இராவணா – சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், யாழ்ப்பாணம், 1989.

22. முகர்ஜி, ஆர்.கே.,

இந்தியாவின் நிலப்பிரச்சனைகள், (தமிழாக்கம், பாம்தத், ரஜனி), சென்னை, 1947, பக். 222.

23. நம்பூதிரிபாட், இ.எம்.எஸ்.,

இந்திய வரலாறு : ஒரு மார்க்சியக் கண்ணோட்டம், 1978, பக். 130–131.

24. பாரதியார் கட்டுரைகள், சமூகம். பக். 113–114.

25. மேலது நூல். பக். 96–97.

26. பாரதியார் கதைகள், 1977, பக். 454–455.

27. மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

கேசவன், கோ.,

இயக்கமும் இலக்கியப் போக்குகளும், சென்னை, 1982, பக். 152–153. (திரு. கேசவனுக்கு நன்றி).

28. கேசவன், கோ.,

இயக்கமும் இலக்கியப் போக்குகளும், சென்னை, 1982, பக். 150–153.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னரும் சில ஆண்டுகள் நிகழ்ந்து வந்த இக்கொடுமைகளுக்கெதிராக இந்திய பொதுவுடைமைக் கட்சியால் நடாத்தப்பட்ட விவசாய, தொழிலாளர் போராட்டங்களும் கடுமையான அடக்குமுறையை உறுதியுடன் எதிர்கொண்டு நின்றமையுமே இக் கொடுமைகள் குறைவதற்குக் காரணமாகின. சாணிப்பால் கொடுக்காதே! சவுக்கடி அடிக்காதே! கொக்குத் தண்டனை வழங்காதே! கிட்டித் தண்டனை வழங்காதே! என்ற முழக்கங்களுடன் இப்போராட்டங்கள் நடாத்தப்பட்டதாகச் சிவசுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

மிக நீண்ட காலமாகத் தமிழகத்தில் நிலவிவந்த அடிமை முறை, அடிமைகளாக விளங்கிய தாழ்த்தப்பட்ட மக்களின் அவலங்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த கொடூரமான தண்டனைகள், அவர்களது இன்றைய எழுச்சி முதலியன பற்றிப் பின்வரும் நூலிற் சான்றுகளுடன் விரிவாக ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவசுப்பிரமணியன், ஆ.,

அடிமை முறையும் தமிழகமும், சென்னை, 1984.

தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட மனிதாபிமானமற்ற கொடூரமான தண்டனைகள் குறித்து இந்நூலில் இடம் பெறும் விளக்கங்களுள் ஒரு சில வருமாறு : "......... பண்ணையார் வீடுகளின் முகப்பில் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும் திரிக்கைவால் சவுக்கை எடுத்து மயக்கம் வரும் அளவிற்கு அடிப்பார்கள். மயங்கிக் கீழே விழுந்தபிறகும் அவர்கள் விடுவதில்லை. மாட்டுச் சாணத்தைக் கரைத்து மாட்டுக்கு மருந்து புகட்டும் மூங்கில் கொட்டத்தில் நிரப்பிச் சாணிப்பாலை பருகிடச் செய்வார்கள்........ உழைக்கும் வர்க்கத்தை உருவாக்கிடும் பெண்ணினத்தை, பண்ணையடிமைகளான தாழ்த்தப்பட்ட குலத்தின் தாயை எவ்வளவு மோசமாக நடத்தினார்கள். எத்தகைய கொடூரமான தண்டனை அளித்தார்கள் என்பதைச் சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது. அந்த தாயின் மார்பகத்தை கிட்டியால் முறுக்கிக் கசக்கிப் பிழிந்து இரத்தச் சேறாக்கி, வேதனையில் அலறித்துடிக்கச் செய்யும் அலங்கோலத்தைக் கண்டு இரசிப்பார்கள். ........." (பக்.41–42)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழில் எழுந்துள்ள பள்ளு இலக்கியங்களிலும் இத்தகைய தண்டனை முறைகள் சில விபரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

29. வானமாமலை, நா.,

ஆராய்ச்சி, காலாண்டிதழ், மலர்.4, இதழ்.1, அக்டோபர், 1973, பக். 83–94.

வானமாமலை, நா.,

தாமரை, ஜனவரி, 1977, மலர்.18, இதழ்.7, பக்.55–64.

30. வானமாமலை. நா.,

தாமரை, ஜனவரி, 1977, மலர்.18, இதழ்.7, பக். 58.

31. இவை குறித்துப் பின்வரும் நூலில் விரிவாகக் காணலாம்.

வெகுஜனன் இராவணா – சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் புதிய வெளியீடு, யாழ்ப்பாணம், 1989.

32. இவை பற்றி இந்நூலாசிரியரால் எழுதப்பட்ட 'பாரதியார் சிந்தனைகள்' என்னும் நூலில் விரிவாகச் சான்றாதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. பாரதியார் சிந்தனைகள், 1984, பக். 127–179.

33. இதுபற்றித் திரு. கோ. கேசவன் தமது நூலொன்றில் ஆதாரங்களுடன் விரிவாக நோக்கியுள்ளார்.

கேசவன், கோ.,

இலக்கியமும் இலக்கியப் போக்குகளும், சென்னை, 1982, பக். 135–138.

34. மேலது நூல்.

35. காந்திஜி, வினோபாஜி முதலியோரின் பணிகள் உண்மையில் நிலவுடைமையாளர்களின் செயல்களுக்கும் அவர்களது அதிகார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெறிக்கும் சப்பைக்கட்டுக் கட்டுவதாகவே அமைந்தன. திராவிட முன்னேற்றக் கழகத்தினது செயற்பாடுகள் கூட பிராமண ஆதிக்கத்தைத் தகர்க்க உதவியதே தவிர நிலவுடைமை ஆதிக்கத்தை அடியோடு அகற்றியதில்லை. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிற் கொண்டுவரப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் கூட வெறுமனே கண்துடைப்பு முயற்சிகளாகவே அமைந்தன.

36. இவ்வகையிலே புதுமைப்பித்தனின் துன்பக்கேணி, பொன்னகரம், மகாமசானம், தெருவிளக்கு, நாசகாரக்கும்பல், சிதம்பர ரகுநாதனின் பஞ்சும் பசியும், டி. செல்வராஜின் மலரும் சருகும், சின்னப்ப பாரதியின் தாகம், பொன்னீலனின் கரிசல், இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல், ஹெப்சிபா யேசுதாஸனின் டாக்டர் செல்லப்பா முதலிய ஆக்கங்கள் கவனிக்கத்தக்கவை.

36 A. சிவசுப்பிரமணியன். ஆ.,

அடிமை முறையும் தமிழகமும், சென்னை, 1984, பக். 40–45.

37. இது தொடர்பாக இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவந்துள்ள அறிக்கைகளும் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளும் மனங்கொளத்தக்கவை. அடிக்குறிப்பு எட்டினை (8) பார்க்கவும்.

38. குன்றின் குரல், ஜுலை – ஆகஸ்ட், 1990, பக். 2.

39. குன்றின் குரல், ஜுலை – ஆகஸ்ட், 1990, பக்.4–5.

இவ்வகையிலே 1960களிலும் 1970 களிலும் தஞ்சாவூர் - கீழ்வெண்மணியிலும், இலங்கையின் வடபகுதியிலும் இடம் பெற்றுள்ள கொடுமைகளும் ஒப்பு நோக்கத்தக்கவை.

40. இவ்விடயம் பற்றிச் சோ. சந்திரசேகரன் விரிவாக நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சந்திரசேகரன், சோ.,

இலங்கை இந்தியர் வரலாறு, 1989, பக். 54–64.

சிலர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலேயே இந்தியத் தொழிலாளர் கறுவாப்பட்டை சேகரிப்பிற்காக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர் எனக் கூறுவர். ஆயின், அவர்கள் பெரியதொரு தொழிலாளர் சமூகமாக விளங்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

41. நடேசய்யரின் மேற்கண்ட பணிகள் பற்றிச் சாரல் நாடன் தமது நூலில் விரிவாகவும் ஆதாரபூர்வமாகவும் விளக்கியுள்ளார். சாரல்நாடன்,

தேசபக்தன், கோ. நடேசய்யர், 1988.

Visaka Kumari Jayawardana,

The Rise of the Labour Movement in Ceylon, 1972.

42. Rathakrishnan, N.,

"The Stateless in Ceylon", The Indian Year Book of International Affairs, Madras, 1963.

43. சந்திரசேகரன், சோ.,

இலங்கை இந்தியர் வரலாறு, மதுரை, 1989. பக். 220–249.

நித்தியானந்தன். வி.,

இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி 1948–1956, வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள், 1989, பக் 97–136.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*பத்தொன்பதாம் நூற்றாண்டில்*
*உலகின் பல்வேறு பாகங்களுக்கும்*
*தமிழகத்திலிருந்து சென்று குடியேறிய,*
*குடியேற்றப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின்*
*வரலாறு, இதுகாலவரை எங்குமே*
*செம்மையாகவும் விரிவாகவும்*
*எழுதப்படவில்லை. இலங்கை தவிர்ந்த*
*பிறநாடுகளில் குடியேறிய தமிழ்த்*
*தொழிலாளர்களின் இன்றைய நிலை பற்றி*
*மேல்வாரியாகச் சில தகவல்களை மட்டுமே,*
*ஒரு சிலர் வெளிப்படுத்தியுள்ளனர்.*
*இலங்கையின் மலையகத் தமிழ்த் தொழிலாளர்*
*பற்றிய வரலாறு, இதுவரை செம்மையாக*
*எழுதப்படவில்லையாயினும், சிலர்*
*இத்துறையில் பயனுள்ள முயற்சிகளைச்*
*செய்துள்ளனர்; செய்து வருகின்றனர்.*
*மலையகப் பகுதியிலே குடியேறிய*
*தொழிலாளர்கள், கடந்த ஒன்றரை*
*நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக*
*தமக்கே பிரத்தியேகமாகவுரிய பல*
*பிரச்சினைகளையும், இலங்கையில்*
*வாழும் பல்வேறு சமூகத்திருக்கும்*
*பொதுவாகவுரிய பிரச்சினைகளையும்*
*கொண்டவர்களாக, இன்றுவரை*
*வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.*

---

***விலை ரூபா 30 /- (இலங்கை) ரூபா 15/- (இந்தியா)***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்